மாலை: 51 மணி: 6 ஜூன் 2009 விலை ரூ.10

திருக்கோயில்

இந்து சமய அறநிலையத்துறை வெளியீடு

கழுகுமலை அருள்மிகு கழுகாசல மூர்த்தி

ஸ்மார்ட் கிரியேஷன்ஸ்

பொன் ஆலயம்

பக்தியுடன் சமர்ப்பணம் செய்த 8.02.2009 அன்று கும்பாபிஷேகம் நடைபெற்ற கும்பகோணம் அருள்மிகு ஸ்ரீ ஒப்பிலியப்பர் திருக்கோயில் மூலவர் தங்க விமான பத்மம் மற்றும் மஹா பத்மம்

அதிநவீனம், அற்புதம், உன்னத NTGD லண்டன் தொழில்நுட்பம்!

தொடர்புக்கு :
K.S.S. நாராயணன்
98848 77722

- சிக்கனமான முறை
- நீடித்து நிலைக்கும் பொலிவு
- தமிழக அறநிலையத்துறையின் அங்கீகாரம்
- தங்கத்தின் அளவை துல்லியமாக கணக்கிடலாம்



தங்கத்தேர், கொடிமரம், கலசங்கள், விமானம், கவசங்கள், பிரபை, மூலஸ்தான கதவுகள்

பித்தளை, தாமிரம், வெள்ளி மற்றும் பஞ்சலோகத்தில் 24கேரட் கோல்ட் கோட்டிங் சிறப்பாக செய்து தர இயலும்

SP 15, அம்பத்தூர் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை - 600 058. Tel : 044 2623 0033 /4205 9911

திருக்கோயில்

திருவள்ளுவர் ஆண்டு: 2040 ஆனி மாதம்
மாலை 51. மணி 6 ஜூன் 2009

அன்பார்ந்த வாசகப் பெருமக்களே!

வணக்கம்.

அருள்மிகு நடராஜப்பெருமானின் திருமஞ்சனமும், மங்கள நாளான ஆனி மாதப் பூர்ணிமையும் கொண்ட ஆனித் திங்கள் மலரும் இம்மாதத்திய இதழ், கழுகுமலை அருள்மிகு கழுகாசலமூர்த்தியின் திருவுருவத்தினை முகப்பாகக் கொண்டும், எத்திக்கும் புகழ் மணக்கும் தித்திக்கும் திருப்புகழ் தந்த அருளாளர் அருணகிரிநாத சுவாமிகளின் திருவுருவத்தினை உள்முகப்பிலும் கொண்டு மலர்ந்துள்ளது.

திருப்புகழை அருளிச் செய்த அருணகிரிநாத சுவாமிகளின் ஒப்புயர்வை செந்தமிழ்வாரிதி முனைவர். இரா. செல்வக்கணபதி அவர்களும், நாலாயிரத்தை முதலாயிரம், பெரிய திருமொழி, திருவாய்மொழி என நான்கு பகுதிகளாக வகுத்து, அவற்றிற்கு வேதகானத்தையும் அமைத்துப் பாடும்படி செய்த நாதமுனிகளின் சிறப்புகளை மாண்புமிகு மத்திய செய்தி மற்றும் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் நயவுரைநம்பி. டாக்டர் திரு. எஸ். ஜெகத்ரட்சகன் அவர்களும் வழங்கியுள்ளனர்.

அரிய பிறப்பான மனிதப் பிறப்புக்குப்பின் இனியொரு பிறப்பு எடுக்காத வகையில் நாம் இறைவனிடம் ஒன்றிட ஐந்தெழுத்தை ஓதி உய்ய வேண்டும் என்பதை விளக்கும் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் "ஐந்தெழுத்து" எனும் அறவுரை அவரது நினைவலையாக இவ்விதழில் வெளிவந்துள்ளது.

பரம்பொருளின் மீது காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி வேண்டுபவர்கள் மும்மல நீக்கம் கைவரப் பெற்று புற உலகை மறந்து, பேரொளிமிக்க தெய்வீகக் காட்சியில் திளைப்பார்கள் என்பதை பரமன் மேல் பற்று வைத்த பசுபதி நாயனாரின் சிறப்பின் மூலம் விளக்கியுள்ளார் சித்தாந்த இரத்தினம் டாக்டர் எம்.ஆர். சந்தானம் அவர்கள்.

ஸ்ரீமந் நாராயணனின் பெயரை ஆடிப்பாடி அகம் குழைந்து பாடிப்பாடி பரவசம் அடைந்து நாடி நாடி திருநாடு அடைவோம் என, திருநாமத்தின் பெருமைதனை வழங்கியுள்ளார் புலவர் எ. பரந்தாம ராமானுஜதாசர்.

பாம்பன் குமரகுருபரதாச சுவாமிகளின் குரு பூஜையை முன்னிட்டு, திரு. வீ.கலைச்செல்வன் அவர்கள் வழங்கியுள்ள சிறப்புக் கட்டுரையும், பெ. இராமநாதப்பிள்ளை அவர்களின் உலகம் உய்ய உதித்த உடையவர் எனும் தொடர் கட்டுரையும் இவ்விதழில் வெளிவந்துள்ளது.

விலங்குகளுக்கு மனிதர்கள் தாங்கள் அறியாமல் செய்த பாவங்களும் கேடுகளும் நீக்குபவராக விளங்கும் வில்லிவாக்கம், அருள்மிகு முத்தாம்பிகை உடனாய அருள்மிகு அகஸ்தீஸ்வரரின் சிறப்புகளும், பிதிர்முக்தியை தரவல்ல இடும்பாவனம் திருத்தலச் சிறப்புகளும், முருகன் அருள்பெற்று திருப்புகழ் பாடிய வயலூர் திருத்தல சிறப்புகளும், திருத்தல உலாக்களாக இவ்விதழில் வழங்கப்பட்டுள்ளது.

திருக்கோயில் இதழின் வாசகப்பெருமக்கள் இதழினைப் படித்து இன்புறவும், தொடர்ந்து தங்களின் நல் ஆதரவினை வழங்கிடவும் வேண்டுகிறேன்.

ப.ரா.சம்பத்

இந்துசமய அறநிலையத்துறை
119, உத்தமர் காந்தி சாலை,
சென்னை – 600 034.

(ப.ரா.. சம்பத், இ.ஆ.ப.,)
ஆணையர்

குறளோவியம்



அடர்ந்த காட்டுவழியாக இரண்டு நண்பர்கள் பயணம் செய்து கொண்டிருந்தார்கள். ஒருவன் பெயர் நல்லான். மற்றொருவன் பெயர் வல்லான். இருவரும் காட்டில் விலங்குகளின் பயம் தெரியாமல் இருக்க, நாடோடிப் பாடல்களை உற்சாகமாகப் பாடிக்கொண்டு நடந்தார்கள். இருட்டுக்கு முன்பு காட்டைக் கடந்து தங்கள் ஊருக்குச் சென்றுவிட வேண்டுமென்பதில் அவர்கள் குறியாக இருந்த காரணத்தால் வேகமாகவே நடந்தார்கள்.

அவர்கள் எதிர்பாராதவாறு ஒரு பெரிய ஆபத்து காத்திருந்தது. அவர்கள் காட்டுப்பாதையில் ஒரு குன்றினைக் கடந்து ஓர் ஒற்றையடிப்பாதையில் திரும்பியபோது, திடுக்கிடத் தக்கவண்ணம் ஒரு கரடிநின்று கொண்டிருந்தது. அதைப் பார்த்ததும் இருவரும் ஒருவர் கையை ஒருவர் கோத்துக் கொண்டு ஓடத் தொடங்கினார்கள். கரடியும் அவர்களைத் துரத்திக்கொண்டு ஓடிற்று. வல்லான், நல்லானைப் பார்த்துக் கேட்டான்: "ஏய்! உனக்கு மரம் ஏறத் தெரியுமா?" என்று! நல்லான், "தெரியாதே!" என்று பதில் சொன்னான். வல்லான், "அடப்பாவி! உன்னால் நானும் கரடியின் வாயில் சிக்கவேண்டும் போலிருக்கிறதே!" என்று நடுங்கினான்.

அதற்குள் கரடியும் அவர்களை நோக்கி வருவது தெரிந்தது. இருவரும் ஓடிப்போய் ஒரு புதருக்குள் ஒளிந்து கொண்டார்கள். கரடி, அந்தப் புதரின் பக்கம் வந்து கொண்டிருந்தது. வல்லான் திடீரென்று நல்லானின் கையை உதறிவிட்டு அங்குள்ள உயரமான மரத்தின்மீது மளமளவென்று ஏறி உச்சிக்குப் போய் விட்டான். கரடி, அவர்களைத் தேடிச் சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டிருந்தது. அதற்குள் மரத்தின் உச்சியிலிருந்து வல்லான், நல்லானைக் கூவி அழைத்து,

"ஏய், நீ எங்கேயாவது ஓடித் தொலை. இல்லாவிட்டால் கரடி உன்னைத் தீர்த்துவிட்டுப் பிறகு என்னையும் கண்டுபிடித்துவிடும்," என்று கூறினான்.

"நான் எங்கிருந்தாலும் கரடி என்னை விடப் போவதில்லை. நான் இங்கேயே இருக்கிறேன்," என்றான் நல்லான்.

"அடப்பாவி! உன்னைக் கண்டுகொண்டால், பிறகு என்னையும் கண்டு கொண்டு விடுமடா! நீ வேறு இடத்துக்குப் போய் அங்கேயாவது அதன் வாயில் அகப்பட்டுக் கொள்! என்னையாவது காப்பாற்று!" என்று வல்லான் கதறினான்.

அதற்கிடையே கரடி, அந்தப் புதரின் பக்கம் வருவது தெரிந்தது. நல்லான் திடீரெனக் கீழே விழுந்து மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டு உயிரற்றவனைப் போலக் கிடந்தான். கரடி அவனருகே வந்து பார்த்தது. அவனது முகத்தின் பக்கம் தனது முகத்தை நீட்டி உயிர் இருக்கிறதா, இல்லையா? என்று கவனித்தது. செத்து விட்டான் என்று எண்ணி ஏமாந்து – கரடி, வந்த வழியே போய் விட்டது.

சிறுவர்களுக்கு இப்படியொரு கதை, ஆரம்பப் பள்ளியில் சொல்லிக் கொடுப்பதுண்டு. அந்தக் கதையுடன் குறள் ஒன்றினை இணைத்து, சற்றுத் திருத்திப் படித்துப் பார்ப்போம்.

கரடி போனதும், மரத்தின் உச்சியிலிருந்து வல்லான் கீழே இறங்கி வந்தான். அதற்குள் நல்லானும் அவனுடைய நண்பனை வரவேற்கத் தயாராக எழுந்து உட்கார்ந்து கொண்டான். வல்லான் வியப்புடன் நல்லானைப் பார்த்துக் கேட்டான்:

"ஆருயிர் நண்பா! அந்தக் கரடி உன் காதில் ஏதோ செய்தி சொல்லிற்றே, அது என்ன செய்தி?"

நல்லான் சிரித்துக் கொண்டே, "கரடி எனக்கு ஒரு குறளைச் சொல்லி அதற்கு விளக்கமும் சொல்லிச் சென்றது," என்றான்.

"என் இனிய நண்பா! என்ன குறளப்பா அது?"

நல்லான் மீண்டும் சிரித்துக் கொண்டே,

"கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல்."

—என்ற குறள்தான் அது!" என்றான்.



மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்

"அப்படியா? கரடிக்கு குறள் கூடத் தெரியுமா? ஆமாம், அதற்கு அந்தக் கரடி, என்ன விளக்கம் சொல்லிற்று?" என்று வினவினான் வல்லான்.

நல்லான் அந்த விளக்கத்தையும் சொன்னான்:

"நமக்கு வருகிற தீமையிலும் ஒரு வகையான நன்மை உண்டு. எப்படியென்றால் அந்தத் தீமைதான் நம்முடைய நண்பர்களின் இயல்புகளை நமக்கு அளந்து காட்டுகிற அளவுகோலாகும்."

இந்த விளக்கத்தைக் கேட்டு, வல்லான் வெட்கித் தலைகுனிந்தான்.

அதிகாரம்: 80. நட்பாராய்தல். பாடல்: 796.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் குறளோவியம் நூலிலிருந்து நன்றியுடன் எடுத்து வெளியிடப்படுகிறது.

இதழின் உள்ளே..

அருணகிரிநாதர்	– முனைவர் இரா.செல்வக்கணபதி	5
நாதமாமுனிகள்	– மாண்புமிகு மத்திய செய்தி மற்றும் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் நயவுரை நம்பி டாக்டர் திரு. எஸ். ஜெகத்ரட்சகன்	7
ஐந்தெழுத்து	– திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்	11
எடுத்து சுமப்பான்		15
பூனைவணங்கிய வில்லிப்பாக்கம் சிவன்	– பனையபுரம் அதியமான்	18
பிதுர் முக்தியை தரவல்ல திருத்தலம்	–	22
திருநாமப் பெருமை	– புலவர் ஏ. பரந்தாம ராமாநுஜதாசன்	25
பக்திக்கு ஒருபசுபதி நாயனார்	– டாக்டர் எம்.ஆர்.சந்தானம்	29
உலகம் உய்ய உதித்த உடையவர்	– பெ.ராமநாதபிள்ளை	31
பாம்பன் சுவாமிகள்	–வீ. கலைச்செல்வன்	34
தித்திக்கும் திருப்புகழ் பிறந்த வயலூர்		37

திருப்புகழ் தந்த அருணகிரிநாத சுவாமிகள்

அருணகிரிநாதர்

"முத்தைத் தரு பத்தித் திருநகை
அத்திக்கு இறை சத்திச் சரவண
முத்திக்கு ஒரு வித்துக் குருபர
என ஓதும்

முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரும்
முப்பத்துமூ வர்க்கத்து அமரரும்
அடிபேண

பத்துத் தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியில்
இரவாகப்

பத்தற்கு இரதத்தைக் கடவிய
பச்சைப் புயல் மெச்சத் தகுபொருள்
பட்சத்தொடு ரட்சித் தருள்வதும்
ஒருநாளே

தித்தித் தெய ஒத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கு ஒக்கு நடிக்கக் கழுகொடு
கழுதாடத்

திக்குப் பரி அட்டப் பயிரவர்
தொக்குத் தொகு தொக்குத்
தொகு தொகு
சித்ரப் பவுரிக்கு த்ரிகடக
எனவோதக்

கொத்தப் பறை கொட்டக் களமிசை
குக்குக் குகு குக்குக் குகுகுகு
குத்திப் புதை புக்குப் பிடியென
முதுகூகை

கொட்புற்றெழ நட்பற் றவுணரை
வெட்டிப்பலி இட்டுக் குலகிரி
குத்துப்பட ஒத்துப் பொரவல
பெருமாளே!

திருப்புகழை அருளிச்செய்த அருணகிரிநாதர் வரலாறு தெளிவாக அறியப்படவில்லை. பொதுவாகவே, சைவ சமய அருளாளர் வரலாறுகள் பலவும் கற்பனைக்கூறுகள் கலந்தனவாகவே காணப்படுகின்றன. ஓரளவு தெரியவந்துள்ள அன்னாரது வரலாறு குறித்துச் சில செய்திகள் இங்கே திரட்டித்தரப் பெற்றுள்ளன.

அருணகிரிநாதர் தம் திருப்புகழில் 'அதலசேடனார் ஆட' என்ற பாடலில் பிரபுதேவமாராசன் என்ற மன்னனைக்

செந்தமிழ் வாரிதிமுனைவர். இரா.செல்வக்கணபதி

குறித்துள்ளார். இப்பெயரில் மூன்று மன்னர்கள் 1406 முதல் 1465 வரை வாழ்ந்துள்ளனர். மதுரைச் சிவப்பிரகாசம் தாம் எழுதிய சிவப்பிரகாச உரையில், திருப்புகழ்ப்பாடல் பகுதி ஒன்றை மேற்கோள் காட்டுகிறார். இவற்றைக் கொண்டு அருணகிரிநாதர் 15 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வாழ்ந்தவராகலாம் என்று ஒருவாறு தீர்மானிக்கலாம்.

அருணகிரிநாதர் திருவண்ணாமலைத் தலத்தில் பல்லாண்டுகள் வாழ்ந்தவர். இளமையில் வாழ்ந்த முறையற்ற வாழ்வால் அவர் தொழுநோயால் பிடிக்கப்பட்டு, கோபுரத்தின் மீதேறிக் குதித்து உயிர்விட முனைந்தபோது முருகப்பெருமான் இவரைக் காத்தருளிப் பாடும் பணியை வழங்கினார். உடல்நலம் பெற்றுத் தமிழ் நாட்டில் முருகன் கோயில் கொண்டுள்ள இடங்களெல்லாம் சென்று, முருகன் மீது சந்தக் கவிமாலைகளைப் பாடினார். பல இடங்களில், பலராலும் இவர் பாடிய பாடல்கள் திரட்டப்பெற்றுத் திருப்புகழ் என்ற பெயரில் தொகுக்கப்பட்டன.

அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ் தொகை 16,000 என்பர். இன்று 1307 பாடல்கள் மட்டுமே கிடைத்துள்ளன. வெவ்வேறு பதிப்புகளில் இப்பாடல் தொகை 1306,1361 எனக் காணப்படுகின்றன. திருப்புகழ் அல்லாது அருணகிரிநாதர் பாடியனவாக கந்தர் அந்தாதி, கந்தர் அனுபூதி, கந்தர் அலங்காரம் என்ற முருகன் தோத்திர நூல்களும் வழக்கில் உள்ளன. மேலும் வேல்விருத்தம், மயில்விருத்தம், சேவல்விருத்தம் என்ற சிறு நூல்களும் இவர் அருளியனவாகவே வழங்கப்பட்டு வருகின்றன. தேவாரப் பாடல்பெற்ற தலங்களைப்போல், பிற்காலத்தில் திருப்புகழ் பாடல் பெற்ற தலங்களும் முருக பக்தர்களால் போற்றிக் கொண்டாடப்பட்டு வருகின்றன.

அருணகிரிநாதரை அவர்காலத்திற்குப் பின் வந்த அருளாளர்கள் பலரும் 'பாராட்டிப் போற்றியுள்ளனர். குறிக்கத்தக்கவர்கள் தாயுமானவர்', சிதம்பர சுவாமிகள், அந்தகக்கவிவீரராகவர், மார்க்க சகாயதேவர், தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர், கந்தப்ப தேசிகர், இராமலிங்க சுவாமிகள், பாம்பன் சுவாமிகள் முதலியோராவர்.

அருணகிரிநாதர், தேவார மூவருள் ஒருவராகிய திருஞானசம்பந்தரைத் திருமுருகன் அவதாரம் என்று குறித்துள்ளார். இவர்மீது பொறாமைகொண்ட காளி உபாசகன் சம்பந்தாண்டான் என்பவன் பல துன்பங்களை இவருக்குத் தந்தான். திருவண்ணாமலை கிழக்குக் கோபுரத்தை அடுத்த 16 கால் மண்டபத் தூண் ஒன்றில் முருகப்பெருமான் அருணகிரிநாதர் பெருமையை உலகறியச் செய்யத் திருக்காட்சி தந்தருளினான். அம்மண்டபம் இன்று சிறு கோயிலாகக் கம்பத்து இளைய நாயனார் கோயில் என்று வழங்கப்பட்டுவருகிறது.

சம்பந்தாண்டான் நிகழ்த்திய வஞ்சகத்தில் – இவர் கிளி உருக்கொண்டு, வடபுலம் சென்று பாரிஜாதமலர் கொண்டுவரச் சென்றதாகவும், அவர் மீண்டும் வருவதற்குள் பகைவன் அவர் உடலைப் புதைத்து விட்டான் என்றும் கதைகள் உண்டு. அவர் தம் உடலைக் கிடத்திக் கிளி உருக்கொண்ட கோபுரம் திருவண்ணாமலை ஆலயத்தில் கிளிக்கோபுரம் என்றே வழங்கப்பட்டு வருகிறது. அவர் திருமேனி அண்ணாமலையார் கருவறைக்குப் பின்பக்கம் அடக்கம் செய்யப்பெற்றதாகக் கூறுவர்.

திருப்புகழ் தமிழுக்குக் கிடைத்த கந்தக் கருவூலம் வட மொழிச் சொற்கள் பெரிதும் கலந்து திருப்புகழ் பாடப்பெற்றுள்ளது. பிரித்துப் படிக்கவும், எளிதில் பொருள் கொள்ளவும் இயலாத நடையுடையது. அதுபற்றி இதனை 'இருப்பு அவல்' என்றும் கூறுவர். 'வாக்கிற்கு அருணகிரி' என்று இவர் பின்வந்த அறிஞர்களால் பாராட்டப் பெற்றார். திருமுருக. கிருபானந்தவாரியார் நூல் முழுவதற்கும் விரிவுரை செய்தார். அது பலதொகுதிகளாக வெளிவந்துள்ளது. கி.வா.ஜகந்நாதனும் உரை வரைந்துள்ளார். நாடெங்கும் அருணகிரிநாதர் விழாக் குழுக்களும், திருப்புகழ் சபைகளும், சங்கங்களும் நூற்றுக்கணக்கில் இயங்கி வருகின்றன.

*

"வேதத் தமிழறிந்து ஆழ்வார்கள்
மெய்யுணர்வால்
ஓதுமறை எல்லாம் ஒருங்குறக்
காதலால்
நாத முனிகள் நமக்களித்தான்
நாரணன்
பாதங்கள் கொண்டோம் பணிந்து."

காவிரியாற்றின் கரையில் உள்ளது வீரநாராயணபுரம் என்னும் திருப்பதி. அவ்வூரில் பல கலைகளையும் நன்கு கற்றுணர்ந்த மறையவர்கள் பலர் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் எம்பெருமானிடத்தில் பேரன்பு வாய்ந்து, 'பரம பாகவதர்கள்' என்று சொல்லும்படி விளங்கினர். அவர்கள்

நாதமாமுனிகள்

உள்ளம் உரை செயல் மூன்றும் ஒத்தவர்கள். அவர்களுள் சொட்டைக்குலம் என்னும் ஒரு குலத்தவர் இருந்தனர்.

அக்குலத்தில் ஈச்சுவர முனிகள் என்பார் தோன்றித் தென்மொழி, வடமொழி இரு மொழிகளிலும் பல கலைகளையும் நன்கு கற்றுணர்ந்து, எல்லாரினும் சிறந்து விளங்கினார். அவருக்கு ஒரு அருமருந்தன்ன மைந்தர் தோன்றினார்.

ஈச்சுவர முனிகள், அம்மைந்தருக்கு 'நாதமுனிகள்' என்று திருப்பெயர் சூட்டினார். நாத முனிகள் ஏழிசைகளையும், தென்மொழி வடமொழிக் கலைகளையும் பயின்று, திருமகள் கேசவன் பால் நீங்காத அன்பும், சிறந்த ஒழுக்கமும், உடையவராய் விளங்கினார் அவர். இசை உணர்விலும், தென்மொழி வன்மையிலும், திருமகள் நாதன் அன்பிலும் சிறந்து திகழ்ந்தார். அவரைக் கண்டவர்கள் எல்லோரும் 'இவர், உலகு உய்யத் தோன்றிய பெரியோர் ஆவர்' என்று கூறுவார் ஆயினர். அவர் கற்பென்னும் மாண்குணம் அமைந்த கன்னியை மணந்து, இல்லறத்தைப் பல்லறம் ஆற்றிப் பொலிவுறச் செய்தனர். அவருக்கு ஒரு மகன் பிறந்தார். அவர், அம்மகனுக்குத் தம்முடைய தந்தையார்

மாண்புமிகு மத்திய செய்தி மற்றும் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர்
நயவுரை நம்பி. டாக்டர் திரு. எஸ்.ஜெகத்ரட்சகன்

பெயராகிய ஈச்சுவர முனிகள் என்பதையே பெயராக இட்டனர். அவரும், தென்மொழி வடமொழிக் கலைகள் பலவற்றையும் கற்று உணர்ந்து, சிறந்த அறிஞராய் விளங்கி அறிவிற் சிறந்த அணங்கினை மணந்து இல்லறத்தை இனிது நடந்துவாராயினர்.

நாதமுனிகள்வடநாடு செல்லுதலும், மீளுதலும்

நாதமுனிகள் தந்தையாருடனும், மைந்தருடனும் ஊரில் எழுந்தருளியுள்ள மன்னனாரைஅன்புடன் வணங்கி, அப்பெருமானுக்கும் பல தொண்டுகளைப் புரிந்து வந்தனர். நாதமுனிகள் தொண்டு புரிந்து வருகையில், அவருக்கு ஆயர்பாடிக் கண்ணன் இனிது விளங்கியருளிய மதுரை, திருவாய்ப்பாடி, பிருந்தாவனம், யமுனைக்கரை முதலிய திருப்பதிகளைக் கண்டு வணங்க வேண்டும் என்னும் காதல் உண்டாயிற்று. உடனே நாதமுனிகள் மன்னனார் திருமுன் சென்று வணங்கித் தம்முடைய விழைவை விளம்பினார். மன்னனாரும் அருச்சகர் மூலமாக நாதமுனிகளுக்கு விடை அளித்தருளினார். உடனே நாதமுனிகள் தம்முடைய குடும்பத்துடன் புறப்பட்டுச் சென்று வடமதுரை, சாளக்கிராமம், துவரை, அயோத்தி, வதரி முதலிய திருப்பதிகளுக்குச் சென்று, அப்பதிகளில் எழுந்தருளியுள்ள மலர்மகள் மணாளனை வணங்கினார்.

பின்பு, மிக்க பெருமிதத் தோற்றத்தோடு விளங்கும் யமுனை ஆற்றங்கரையில் உள்ள கோவர்த்தனபுரம் என்னும் பதியில் எழுந்தருளியிருக்கும் 'யமுனைத் துறைவன்' என்னும் பெருமானுடைய திருவடித் தாமரைகளை அன்பின் மிகுதியினால் கண்களின்று அருவி என நீர் பெருகி வரப் பலபடியாகப் போற்றிப் பணிந்தார். கண்ணன், களிப்புற்று ஆடிப் பாடி விளங்கிய அப்பதியும், அவ்ஆறும், நாதமுனிகள் மனத்தை முற்றுங் கவர்ந்து விட்டன. ஆதலின் நாதமுனிகள், அப்பதியிலேயே உறைய வேண்டும் என்னும் விருப்பம் கொண்டு அவ்வாறே அப்பதியில் குடும்பத்துடன் இருந்து அப்பதியில் எழுந்தருளியுள்ள யமுனைத் துறைவனை வணங்கி, அப்பெருமானுக்குத் தம்முடைய தந்தையார் முதலியவர்களுடன் பல தொண்டுகளைப் புரிந்து வந்தார்.

நாதமுனிகள் அப்பதியில் ஒருவாறு தொண்டு செய்து கொண்டிருக்கையில், ஒருநாள் இரவிலே அவர் கனவில் மன்னனார் தோன்றி, ''அன்பனே, நம்முடைய வீரநாராயணபுரத்திற்கு வருவாயாக,'' என்று பணித்தார். மறுநாள் நாதமுனிகள் தம்முடைய தந்தையாரிடமும், மகனிடமும் அக்கனவைக் கூறி, அவர்களோடு ஆய்ந்து, யமுனைத் துறைவனாகிய பெருமான்பால் சென்று, அதனை விண்ணப்பித்தனர். அம்முதல்வன் அருச்சகர் வழியாக "அன்பனே! அவ்வாறே செய்க," என்று விடை கொடுத்தருளினான்.

நாதமுனிகள் உடனே தம்முடைய தந்தையார் முதலியவர்களுடன் புறப்பட்டுப் புருடோத்தமம் என்னும் சகந்நாதம், சிங்கவேள் குன்றம், அகோபிலம், திருவேங்கடம், திருக்கடிகை, திருப்புட்குழி, திருக்கச்சி, திருவயிந்திபுரம், திருக்கோவலூர், திருவரங்கம், திருக்குடந்தை முதலிய திருப்பதிகளுக்குப் போய் அப்பகுதிகளில் எழுந்தருளியுள்ள ஒருமுதலாகிய இறைவன் அடிகளை வணங்கி மீண்டும் வீர நாராயணபுரத்திற்கு வந்து மன்னனாரை வணங்கிப் போற்றி நின்றனர்.

அப்பதியில் உள்ளவர்கள், நாதமுனிகளையும், அவர் குடும்பத்தினரையும் வரவேற்று, அவர்களுக்குத் தக்க திருமாளிகையைக் கொடுத்து அவர்களுக்கு வேண்டிய அமுதுபடி முதலியவற்றையும் அளித்து வரலாயினர். நாதமுனிகள் தந்தையாருடனும் மைந்தருடனும் சேர்ந்து, ஒரு நந்தவனம் அமைத்து மன்னனாருக்கு மாலை கட்டிச் சாத்தல், திருவிளக்கு அமைத்தல் முதலிய தொண்டுகளைக் குறைவற நடத்தி வந்தார். பலருக்கும் மெய்ப்பொருள் நூல்களின் அரும்பொருள்களை விளக்கியுரைத்து வரலனார்.'

நாதமுனிகள் நாலாயிரம் பெறுதல்

நாதமுனிகள் மன்னனார் தொண்டுகள் முதலியவற்றை நடத்திக் கொண்டிருக்கையில் மேலை நாட்டிலிருந்து வைணவர் இருவர் வந்து மன்னனாரை வணங்கி அவர் திருமுன்,

"ஆரா அமுதே அடியேன் உடலம்
நின்பால் அன்பாயே
நீராய் அலைந்து கரைய உருக்கு கின்ற
நெடுமாலே
சீரார் செந்நெல் கவரி வீசும் செழுநீர்த்
திருக்குடந்தை
ஏரார்கோலம் திகழக் கிடந்தாய்
கண்டேன் எம்மானே'

என்று தொடங்கும் திருவாய் மொழியின் பதினொரு பாசுரங்களையும் ஓதி மன்னனாரை வணங்கி நின்றனர்.

அப்போது அங்கு மன்னனாரை வணங்க வந்திருந்த நாதமுனிகள் அவற்றைக் கேட்டு, அவற்றில் மிக்க விழைவுடையவராய், அவர்களை நோக்கித் திருமால் அன்பிற் சிறந்த அடியீர்! நீங்கள் ஓதிய பாசுரங்களுள் ஒன்றான ஈற்றுப் பாசுரத்தில் 'ஆயிரத்துள் இப்பத்தும்' என்பது காணப்படுதலின், இப்பாசுரங்கள் ஆயிரம் பாசுரங்களைக் கொண்ட ஒரு பிரபந்தத்தைச் சேர்ந்தவை என்பது தெரியவருகின்றது. அப்பிரபந்தம் உங்களுக்கு முற்றும் வருமோ!'' என்று கேட்டனர். அவர்கள், 'அருங்குணப் பெரியீர்! நாங்கள் அறிந்தவை இப்பதினொரு பாசுரங்களே!' என்றார்கள். நாதமுனிகள் 'அறிஞர்களே! உங்கள் நாட்டில் இப்பிரபந்தம் கொண்ட ஏடுகள் உளவோ' இப்பிரபந்தத்தை முற்றும் பாடம் செய்தார் உளரோ!' என்று கேட்டனர்.

அருங்குணத்தீர்! எங்களுக்கு மட்டுமே இப்பதினொரு பாசுரங்கள் வரும்; மற்றையோருக்கு அவையும் வாரா', என்றார்கள். நாதமுனிகள், அவர்களுக்கு மன்னனாருடைய திருமஞ்சன நீரை அருளி மற்றும் செய்வன செய்து அவர்களைப் போக விட்டனர்; பிறகு, தமக்குள் பலவகையாக எண்ணி, 'இப்பிரபந்தம் திருச்சடகோபர் பிறந்த திருக்குருகூர் நகரில் இருத்தல் வேண்டும் என்று எண்ணி ஆழ்வார்திருநகரிக்குச் சென்று, ஆழ்வாரையும், பொலிந்து நின்ற புனிதனையும் வணங்கிச் சென்று, அப்பதியில் உள்ளார் சிலரை வினவினர். அவர்கள் 'அன்புடையீர் எங்கட்கு அப்பிரபந்தத்தைப் பற்றி ஒன்றும் தெரியாது. இப்பதியிற் கலையறிவு, ஒழுக்கம், திருமகள் கேள்வன்பால் அமைந்த அன்பு எல்லா உயிர்களிடத்தும் பொருள் முதலிய சிறந்த குணங்கள் ஒருங்கு அமையப் பெற்ற பராங்குசதாசர் என்னும் திருப்பெயருடையார் ஒருவர் இருக்கின்றார். அவர்பால் சென்றால் அப்பிரபந்தத்தைப் பற்றி அறிதல் கூடும்,'' என்று கூறி, அவர் இருப்பிடத்தையும் தெரிவித்தனர்.

நாதமுனிகள் அவர்களை வாழ்த்திச் சென்று அவர்கள் கூறிய அப்பராங்குசதாசர் பால் சென்று, அவரைக் கண்டு வணங்கி, 'அன்பிற் பெரியீர்! திருச்சடகோபர் அருளிய பிரபந்தத்தின் ஏடுகள் இங்கு உளவோ" என்று வினவினார். அவர் நாதமுனிகளை நோக்கி 'அருங்குணச் செல்வரே, அப்பிரபந்தம் மறைந்து வெகு நாட்கள் ஆயின. அதனை அருளிய திருச்சடகோபருடைய சீடரான மதுரகவிகள், அவரைப் பற்றிப் பாடியதும், பதினொரு பாசுரங்களைக் கொண்டதும் ஆகிய 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்னும் பதிகம் ஒன்று உளது. அது கண்ணிநுண் சிறுத்தாம்பு என்று தொடங்கப் பெற்றிருத்தலின், அப்பெயர் பெற்றது. எங்கள் குரவர், அதனை எனக்கு அருளி, 'அன்பனே ஆழ்வார் திருமுன் இருந்து, அவர்பால் ஒன்றி நின்ற உள்ளத்தராய் இக்கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்னும் பிரபந்தத்தைப் பன்னிராயிரம் முறை உருப்போடுகின்றவர் களுக்கு முன் ஆழ்வார் தோன்றியருளுவார் என்று உரைத்தார், என்று கூறி, அப்பிரபந்தத்தை நாதமுனிகளுக்கு அளித்தார்.

நாதமுனிகள் அப்பிரபந்தத்தைப் பெற்று அவரை வணங்கி, ஆழ்வார் வீற்றிருந்த

திருப்புளி அடியில் இருந்து, 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்னும் பிரபந்தத்தினை அன்புடன் பன்னிராயிரம் முறை படித்தார். அவருக்கு முன் ஞானதேசிகராகிய ஆழ்வார், தேன் நிறைந்த மகிழ மலர்த்தொடை திருப்புயத்தில் இலங்கத் தலையில் திருமுடி பொலிய செங்கதிர் ஒப்ப ஒளிவிடும் குண்டலங்கள் காதுகளில் திகழக் குளிர்ச்சியொடு மணம் பொலியும் செந்தாமரை மலரை ஒப்பத் தண்ணருளொடு கூடிய திருமுகம் ஒளி விளங்க, முத்திரைத் திருக்கையோடு தோன்றி, நாதமுனிகளை நோக்கி, அன்பிற் சிறந்த அண்ணலே, அருள்பெரும் யோகத்தின் அமர்ந்திருப்போர் தாமரை மணாளன் திருவடி மலர்களை இடைவிடாமல் மனத்துள் வைத்துப் போற்றுதல் போல நீர் நெடும் போதாக உம்முடைய நெஞ்சில் நம்மையே கருதி வைத்துத் துதித்துக் கொண்டிருந்ததற்குக் காரணம் யாது' உரைப்பீர் என்று வினவினார்.

நாதமுனிகள் வணங்கி நின்று எந்தையார் தங்கள் அருளிச் செயலைப் பெற வேண்டும் என்னும் விருப்பமே அதற்குக் காரணம் என்றனர். ஆழ்வாரும் நாதமுனிகளை உவப்புடன் நோக்கியருளித் திருமகள் செல்வம் நமக்கு மயர்வற மதிநலம் அருளினாற்போல அவருக்கு மெய்யறிவு கண்ணைத் திறந்து தாம் அருளிச் செய்த திருவாய்மொழி, திருவிருத்தம் திருவாசிரியம், பெரிய திருவந்தாதி என்னும் நான்கு பிரபந்தங்களையும் பொய்கையார், பூதத்தார், பேயார், திருமழிசையார், குலசேகரர், பெரியாழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார், திருப்பாணர், திருமங்கை மன்னர், கோதை நாச்சியார் என்பவர்கள் அருளிச் செய்த பிரபந்தங்களையும் திருமந்திரத்தையும், மற்றும் உள்ள நூல்களின் அரும்பொருள்களையும், திருவாய் மலர்ந்தருளி, அட்டாங்க யோகத்தின் நுட்பங்களையும் அறிவித்தார்.

நாதமுனிகள் ஆழ்வார்பால் ஆராத காதல் உடையவர். அவரையும் பொலிந்து நின்ற பெருமாளையும் வழிபட்டு அவ்வூரில் உறையலானார். வீர நாராயணபுரத்தில் எழுந்தருளிய மன்னனார், ஒருநாள் இரவு நாதமுனிகள் கனவில் தோன்றி, 'அன்பனே நீ பெற்ற நாலாயிரத்தை நம்முன் வந்து, ஒருருக்கூறுவாயாக' என்று அருளினர். நாதமுனிகள் பொலிந்து நின்ற பெருமானையும், ஆழ்வாரையும் வணங்கி மன்னனார் தம்முடைய கனவில் தோன்றி அருளியதை விண்ணப்பித்தார். ஆழ்வார் அருச்சகர் மூலமாக 'அன்பனே! இப்பிரபந்தங்களை அன்புடையார்கள் எல்லார்க்கும் கூறி அவர்களை இவற்றுள் வல்லவராகும்படி செய்து உய்விப்பாய்' என்று அருளி விடையளித்தனர்.

நாதமுனிகள் ஆழ்வார்பால் விடைபெற்று கொண்டு வீர நாராயணபுரத்திற்கு மீண்டும் வருகையில் வழியில் உள்ள திருப்பதிகளை, அவ்வப்பதிகளுக்கு உரிய அருளிச் செயல்களால் போற்றித் தொழுதார்.வீர நாராயணபுரத்திற்கு வந்து, மன்னனார் பணித்தருளியபடி அவர் திருமுன், நாலாயிரத்தையும் ஒருருக் கூறினார். மன்னனார், மகிழ்ச்சி மிக்கவராய் நாதமுனிகள் கனவில் எழுந்தருளி அவரை நோக்கி, 'அன்பனே நீ! இவற்றை இயற்றமிழில் வகையின் வகுத்து; அவற்றிற்கு இசையும் அமைத்திடுக'' என்றார். நாதமுனிகள் தம்முடைய மருமக்களும் இசையில் வல்லவர்களும் ஆகிய கீழையகத்தாழ்வார். மேலையகத்தாழ்வார் என்பவர்களை அழைத்து மன்னனார் கட்டளையைத் தெரிவித்தார். முன்னே வேத வியாசர், வேதத்தை நான்காக வகுத்து அவற்றிற்கு உதாத்தம், அநுதாத்தம் முதலிய உச்சரிப்பு முறைகளையும் அமைத்தாற்போல நாலாயிரத்தை முதலாயிரம், பெரிய திருமொழி, இயற்பா, திருவாய்மொழி என்னும் நான்கு பகுதிகளாக வகுத்து, அவற்றிற்கு வேத கானத்தை அமைத்து, அவற்றைத் தம்முடைய மருமக்களைக் கொண்டு பாடும்படி செய்தனர். அதனால் நாலாயிரம் உலகிற் பரவுவதாயிற்று.

நாதமாமுனிகளே போற்றி! போற்றி!!

ஐந்தெழுத்து

மெய்யன்பர்களே!

அகில உலகங்களிலும் உள்ள எல்லாப் பொருள்களையும் மூன்று பிரிவில் அடக்கி விடலாம். ஒன்று தானே அறிகின்ற பொருள்; மற்றொன்று அறிவித்தால் அறிகின்ற பொருள்; அறிவித்தாலும் அறியாத பொருள் மற்றொன்று. இவற்றை பதி; பசு, பாசம் என்று நம் சைவ சமய ஞான நூல்கள் கூறுகின்றன.

பதி : தானே அறிகின்ற பொருள்.

பசு : அறிவித்தால் அறிகின்ற பொருள்

பாசம் : அறிவித்தாலும் அறிய மாட்டாத பொருள்.

இறைவனும் அநாதி. ஆன்மாக்களும் அநாதி.

"பதியினைப் போல் பசு பாசம் அநாதி" என்கிறார் திருமூலர்.

ஆனால், இறைவன் இன்ப வடிவினன்; ஆன்மாக்கள் ஆணவத்துடன் கூடித் துன்பத்தை நுகர்கின்றன.ஆன்மாக்களின் துன்பத்தை நீக்குவதற்குத் திருவுளங்கொண்ட இறைவன் அருள் திருமேனி தாங்கி, ஆன்மாக்களுக்கு உடம்பையும், கருவி கரணங்களையும் உலகங்களையும் படைத்துக் கொடுத்தருளினார்.

அவ்வாறு படைத்த எழுவகைப் பிறவிகளில் மனிதப் பிறப்பு உயர்ந்தது.

"அரிது அரிது மானிடராதல்"

—ஔவையார்.

"எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான்
யாதினும் அரிதரிது காண்"

— தாயுமானார்.

எண்ணில்லாத உலகங்களில் எண்ணில்லாத உடம்புகளை எடுத்து, எண்ணில்லாத காலமாகப் பிறந்து இறந்து மாறி மாறி வந்து இளைப்புற்றேன் என்கின்றார் மணிவாசகர்.

ஏழு கடற்கரைகளின் மணல்களை எண்ணி அளவிட்டு இத்துணையென்று உறுதியிட்டுக் கூறினாலும் கூறிவிடலாம்! ஆனால், நாம் பிறந்த பிறப்பை எண்ணி அளவிட முடியாது என்கின்றார் அருணகிரிநாதர்.

"ஏழு கடல் மணலை அளவிடி னதிகம்

எனதிடர் பிறவி அவதாரம்"

– திருப்புகழ்.

ஒவ்வொரு பிறவியிலும் நாம் பருகிய தாய்ப்பால் அனைத்தும் ஒருங்கு கூட்டினால் பாற்கடல் சிறிதாகிவிடும் என்கிறார் குரு நமச்சிவாயர்.

"எடுத்தபிறப் பெல்லாம் எனக்கு வந்த தாய்மார்
கொடுத்தமுலைப் பாலனைத்துங் கூட்டின்–அடுத்துவரும்
பன்னா கணைத்துயிலும் பாலாழி யுஞ்சிறிதாம்
மன்னா சிதம்பரதே வா,"

– சிதம்பர வெண்பா.

இத்தகைய பிறவிகளில் மனிதப் பிறப்பு உயர்ந்தது என்கிறோம். மனிதன் என்ற சொல்லுக்கு நினைப்பவன் என்பது பொருள்.

மன் என்ற பகுதியடியாகப் பிறந்த சொல் மனிதன். நினைக்கின்ற கருவி மனம். அது இன்றியமையாத ஒன்று. மற்ற பிராணிகட்கு மனம் இல்லை. தமிழில் மனிதன்; வடமொழியில் மநுஜா; ஆங்கிலத்தில் மேன். இச்சொற்கள் யாவும் மன் என்ற பெயர்ச் சொல்லிலிருந்து தோன்றியவை.

மனம் என்ற கருவியில்லாமையால் விலங்குகளின் வாழ்வு ஒன்று போல் அமைந்திருக்கின்றது. மாடு அன்று உண்ட புல்லைத் தான் இன்றும் உண்ணுகிறது. மனிதன் உணவைப் பல்வேறு வகையாகப் பக்குவஞ் செய்து உண்ணுகின்றான்.

குருவி அன்று கூடு கட்டியது போல்தான் இன்றும் கட்டுகின்றது. மனிதன் வீடு கட்டும் முறை கணத்துக்கு கணம் பல்வேறு விதமாக முன்னேற்றமடைந்திருக்கின்றது.

உணவினாலே, உடையினாலே, நடையினாலே பேச்சாலே, எழுத்தாலே, வாகனங்களினாலே மனிதன் முன்னேற்றமடைகின்றான்.

இதனை இதனை இப்படி இப்படிச் செய்ய வேண்டும் என்று சிந்திக்கின்றான்.

இவ்வாறு சிந்திக்கின்ற மனிதன் சமய நெறியிலும் முன்னேற வேண்டும்.

நான் யார்? இந்த உடம்பு எப்படி வந்தது? உடம்பு தானே வந்ததா? ஒருவன் தந்து வந்ததா? தந்தவன் தன் பொருட்டுத் தந்தானா? என்பொருட்டுத் தந்தானா? உடம்பு எடுக்கு முன் எப்படி நான் இருந்தேன்? எதற்காக உடம்பு தரப்பட்டது? நான் எங்கிருந்து வந்தேன்? எதன் பொருட்டு வந்தேன்? நான் எங்கே போக வேண்டும்? நான் எங்கே போய்க் கொண்டிருக்கின்றேன்? என்பன வாதி சிந்தனைகள் சிந்திக்க வேண்டும். இந்தச் சிந்தனைகள் தாம் சிந்திக்கத் தக்கவை; இவைகளைச் சிந்திக்கின்றவன் உண்மையில் மனிதனாகிறான். இந்த சிந்தனையில்லாதவர்களைச் சிந்தித்துப் பரமகுருநாதராகிய அருணகிரிநாதர் பாடுகின்றார்.

"சிந்திக்கிலேன் நின்று சேவிக்கிலேன் தண்டைச் சிற்றடியை
வந்திக்கிலேன் ஒன்றும் வாழ்த்துகிலேன் மயில்வாகனனைச்
சந்திக்கிலேன் பொய்யை நிந்திக்கிலேன் உண்மை சாதிக்கிலேன்
புந்திக்கிலேசமும் காயக்கிலேசமும் போக்குவதற்கே."

ஏனைய சிந்தனைகள் பிறவியைத் தரும். அச்சிந்தனைகள் அற ஐந்தெழுத்தைச் சிந்திக்க வேண்டும். பஞ்சாக்கரத்தில் பல பிரிவுகள் உண்டு.

"ஐம்பத்தொன்றி லெட்டாறில் மூன்றினில்
ஐந்தில் தங்கும் அப்பாலை வான்பொருள்"

என்பது திருவகுப்பு.

மூன்று என்பது திரியட்சரம். இதைப் பரமஞானிகள் ஓதுவார்கள்.

"சிவாய எனும் நாமம் ஒரு காலும்

நினையாத

திமிராகரனை வாவென் றழையாதே"

–திருப்புகழ்.

ஆவியீ ரைந்தை அபரத்தே

வைத்தோதில்

ஆவியீ ரைந்தை அகற்றலாம் – ஆவியீர்

ஐந்தறலாம் ஆவியீர் ஐந்துறலாம்.

ஆவியீர்

ஐந்திடலாம் ஓரிரண்டோ டாய்ந்து

– திருவருட்பா.

ந–திரோத மலம்

ம–ஆணவ மலம்

சி–சிவம்

வ–திருவருள்

ய–ஆன்மா

ஆன்ம எழுத்து ய, ஈரைந்து பத்து.

தமிழ் கணக்கில் பத்து –ய.

இந்த யகரத்தை அபரம் – பின் சிகரத்துக்கும், வகரத்துக்கும் பின் வைத்து சிவாய என்று ஓதுவார்களானால்.

"ஆவியீரைந்தை அகற்றலாம்."

ஈரைந்து – பத்து; பத்து என்ற சொல்லை ஆவி என்ற எழுத்துக்களுடன் சேர்க்க வேண்டும்.

ஆ என்ற எழுத்துடன் பத்து என்ற சொல்லைச் சேர்க்க – ஆபத்து.

வி என்ற எழுத்துடன் பத்து என்ற சொல்லைச் சேர்க்க –விபத்து. ஆபத்து உடலுக்கு வருந்துயர். விபத்து உயிருக்கு வருந்துயர்.

உடலுக்கு வருந்துயர்கள் பசி, பிணி முதலியன.

உயிருக்கு வருந்துயர்கள் பிறப்பு, இறப்பு என்பன.

இந்த ஆபத்து விபத்து என்ற இருவகைத் துயரங்களும் சிவாய என்று ஓதுவார்க்கு உண்டாக மாட்டா.

ஆவியீர் ஐந்து அறலாம்:–

ஆணவம் கன்மம் மாயை திரோதம் மாயேயம் என்ற பஞ்ச மலங்களும் அறும்.

ஆவியீர் ஐந்து உறலாம்:–

ஆவியீர் – விளி. உயிர் போன்றவர்களே! நிவிர்த்தி கலை, பிரதிஷ்டாகலை, வித்யா கலை, சாந்தி கலை, சாந்தியதீதகலை என்ற பஞ்சகலாமயமும் உண்டாகும்.

ஆவியீர் ஐந்திடலாம் ஓரிரண்டோடாய்ந்து:–

ஆவி – பிராணவாயு

ஈரைந்தோடு ஓரிரண்டு ஆய்ந்து இடலாம்– வெளியே அவமே கழிகின்ற பன்னிரு அங்குலம் பிராணவாயு அவ்வாறு கழியாது உள்ளே மீளும்.

இன்னும் ஒருமுறை அப்பாடலைச் சிந்திப்போம்

"ஆவியீ ரைந்தை அபரத்தே வைத்தோதில்

ஆவியீ ரைந்தை அகற்றலாம் –ஆவியீர்

ஐந்தறலாம் ஆவியீ ரைந்துறலாம் ஆவியீர்

ஐந்திடலாம் ஓரிரண்டோ டாய்ந்து."

என்ன அற்புதமான செய்யுள்? எத்துணை ஆழமான செம்பொருள்கள்? அதனால் ஐந்தெழுத்தைச் சிந்திப்போமானால் துயர்கள் சிந்திப்போம்.

தனியிழையை எளிதில் அறுத்து விடலாம். இருபத்தையாயிரம் இழைகளைக் கட்டி முறுக்கி விட்டால், அக்கயிற்றால் தேரை இழுத்து விடலாம். அதுபோல் பல லட்சம் முறை மந்திர ஜெபம் கூடுமானால் இறைவனைத் தரிசித்து விடலாம்.

அண்மையில் வாழ்ந்த உண்மைத் துறவியாகிய பாம்பனடிகள் 36 நாள் பிரப்பன் வலசையில் மயானத்தில் குழி வெட்டிக் கொண்டு அக்குழியிலிருந்து இடையறாது சடக்கர மந்திரத்தைச் ஜெபித்து இளம் பூரணனை நேரில் கண்டு தரிசிக்கப் பெற்றார்.

இடையறாது கடைந்தால் பாலிலிருந்து வெண்ணெய் வெளிப்படுவது போல் இடையறாது தியானம் செய்தால்

எம்பெருமான் வெளிப்படுவான்.

விறகிற் றீயினன் பாலிற்படு
நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச்
சோதியான்
உறவுக் கோல்நட் டுணர்வுக்
கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே.

அப்பர் பெருமான்.

உடம்பை உயிர் செலுத்துகின்றது; உயிரை இறைவன் செலுத்துகின்றான்.

காரை டிரைவர் செலுத்துகின்றான். டிரைவரை எஜமான் செலுத்துகின்றான் என்பது போல் உணர்க.

உடம்புக்குள் உயிர்; உயிருக்குள் இறை. டயருக்குள் ட்யூப், ட்யூப்புக்குள் காற்று.

இறைவனுடைய உதவிகளை நாம் ஆழமாக எண்ணினால் உள்ளம் உருகும்; அன்பினால் என்பும் உருகும், முடிவில் உயிர் உருகும். உயிர் உருகினால் உயிரில் உள்ள சிவம் உயிருடன் ஒன்றிவிடும்.

அரக்கின் இடையில் தங்கம்; தங்கத்தின் இடையில் இரத்னமணி.

அரக்கு உருகினால் தங்கம் உருகும்; தங்கம் உருகினால் மணி அதில் பதிந்துவிடும். அதுபோல் உள்ளம் உருகி உயிர் உருகி சிவத்துடன் ஒன்றுபட வேண்டும்.

நம் உள்ளமே உருகவில்லையானால் உயிர் எவ்வாறு உருகும்? இறையுடன் எவ்வாறு ஒன்றுபட முடியும்?

ஆதலால், அன்பைப் பெருக்கி உள்ளத்தையும் உணர்வையும் உயிரையும் உருக்கி, இறையுடன் கலந்து இன்புறுவதுவே சைவ சித்தாந்தத்தின் முடிந்த முடிபாம்.

"முருகன் குமரன் குகனென்று மொழிந்
துருகுஞ் செயல்தந் துணர்வென்
றருள்வாய்
பொருபுங் கவரும் புவியும் பரவும்
குரு புங்கவாண் குணபஞ் சரனே."

என்று அனுபூதி இதனை நமக்கு உணர்த்துகின்றது.

உணவு தேடுகின்ற நாம் உணர்வு தேட வேண்டும். நித்த அநித்த வேறுபாடுகளை உணர்வது தான் உணர்வுடைமைக்கு அழகாகும்.

நேற்றிருந்தார் இன்றில்லை

மகாபாரதத்தில் யட்சப் பிரச்சனை என்று ஒன்று உளது. அது மிகமிக அருமையானது. யட்சமூர்த்தி தருமரைப் பார்த்து வினாவுகின்றார். "தருமா உலகிலே மிகவும் ஆச்சர்யமானது எது?"

தருமர்: "தினந்தோறும் இறக்கின்றவர் களைக் கண்டும் தனக்கு மரணம் இல்லையென்று எண்ணுகின்றானே! அது தான் பெரிய ஆச்சரியம்," என்றார்.

இறப்பெனும் மெய்ம்மையை இம்மை
யாவர்க்கும்
மறப்பெனும் அதனின்மேல்
கேடுமற்றுண்டோ
துறப்பெனும் தெப்பமே துணை
செய்யாவிடில்
பிறப்பெனும் பெருங்கடல் பிழைக்க
லாகுமோ.

என்று தயரதர் கூறுகின்றார்.

ஆதலால் மரணம் வருமுன் இறைவன் சரணத்தை வழிபட்டு நலம் பெற வேண்டும்.

இதுகாறும் கூறியவற்றால், முப்பொருள் உண்மையும், இறைவன் தந்த அரிய பிறப்பு மனிதப் பிறப்பு என்பதும், இப்பிறப்பினால் இனியொரு பிறப்பு எடுக்காத வகையில் நாம் இறைவனுடன் ஒன்றி சிவாத்துவிதம் பெற வேண்டும் என்பதும், அதற்குரிய நெறி அன்பினால் உருகுவது என்பதும், ஐந்தெழுத்தை ஓதி உய்ய வேண்டும் என்பதும் மரணம் நேரு முன் சரணம் பெற வேண்டும் என்பதும் தெரியப் பெற்றோம்.

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவருக்கும் இறைவா போற்றி!!

'எடுத்துச் சுமப்பான்'



கடவுள் தனக்கென ஒரு பெயரும் இல்லாதவர், ஆயினும் அன்பர்கள் அவருக்குப் பல பெயர்களை வைத்து வழங்குகின்றார்கள். இறைவனுக்குப் பல பெயர்கள் தொன்று தொட்டே நூல்களில் வழங்கப்பட்டுள்ளன. எனினும் சில சமயங் களில் அடியார்களும் பக்தர்களும், தாங்களாகவே பல பெயர்களை இறைவனுக்குப் பல வகைகளில் புதியனவாக உண்டாக்கி வழங்குவது உண்டு, சுந்தரமூர்த்தி சுவாமிகள் 'பித்தன்' என்று வைது, சிவ பெருமானுக்கு ஒரு புதிய பெயரை, வசவேயாயினும் அவரே விரும்பி மகிழும்படி வழங்கி விட்டிருத்தலை, நாம் நன்கறிவோம்!

இவ்வாறே பல புலவர்களும் அடியார் களும் தாமாகவே கடவுளுக்குப் பல பெயர்களை 'ஆக்கப் பெயர்'களாகப் படைத்து வழங்கியிருத்தலைக் காண்கின்றோம். அத்தகைய ஆக்கப் பெயர்களுள் 'எடுத்துச் சுமப்பான்' என்பது ஒன்று. இப்பெயர் இந்நாளில் நாம் Porter என வழங்கும்

சுமைதூக்கிகளைக் குறிப்பிடுவதற்கு ஏற்ற ஒன்றாகும். ஏனெனில், அவர்கள் தாம் நமது மூட்டை முடிச்சுகளை எடுத்துச் சுமந்து கொண்டு வர இசைந்து, அதற்காகவே இருக்கின்றார்கள்.

இத்தகைய கூலியாட்களையே குறிக்கத்தக்க "எடுத்துச் சுமப்பான்" என்னும் சொற்றொடரினை. இறைவனுக்கே உரியதாக வழங்கியிருக் கின்றார், ஒரு பெருஞ்சான்றோர்.

சைவ சமய சந்தான குரவர்களுள் ஒருவரும், சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கில் எட்டு நூல்களை இயற்றியிருப் பவரும் ஆகிய உமாபதி சிவாசாரியார், தாம் இயற்றிய திருவருட் பயன் என்னும் நூலின் கண்தான். இப் பெயரை இறைவனுக்கேயுரிய பெயராகப் படைத்து வழங்கியிருக்கின்றார்.

"கிடைக்கத்தகுமேநற் கேண்மையாக்

கல்லால்,

எடுத்துச் சுமப்பானை இன்று"

யார் இறைவனை அடைக்கலம் புகுந்து, தம்மை இறைவன்பால் ஒப்படைத்து விட்டு, "நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானே இதற்கு நாயகமே" எனப் பற்றற்று அவனையே பற்றுக் கோடாகப் பற்றி நிற்கின்றார்களோ, அவர்களுடைய துன்பச்சுமை வினைச்சுமை களையெல்லாம் இறைவன் தான் ஏற்றுக் கொண்டு, அவர்களைக் காத்தருள்கின்றான்.

கூலியின் பொருட்டு நம் சுமைகளை யெல்லாம் தாம் எடுத்துக் கொள்ள இசைந்து, போட்டியிட்டுக் கொண்டு ஓடிவிரும் ஏவலாட்களைப் போல, அன்பின் பொருட்டு அடியார்களின் சுமைகளை யெல்லாம் தான் எடுத்துச் சுமந்து கொண்டு, அவர்களின் புறம் புறமே திரிந்து பின் வருவதற்கு விரும்பி, இறைவன் சித்தமாக இருக்கின்றானாம்!

முன்பு ஒருகால் சிவபெருமான் மதுரையில், திரு நீலகண்ட யாழ்ப்பாணர் பொருட்டு விறகு சுமந்து கொண்டு, விறகு தலையனாக வந்தனன் அல்லனோ? திருநாவுக்கரசர் பொருட்டுக் கட்டுக் சோறு சுமந்து கொண்டு திருப்பைஞ்ஞிலியில் வந்து காத்திருந்தனன் அன்றோ? 'வந்தி' என்னும் செம்மனச் செல்வியின் பொருட்டு, வைகையாற்றங் கரையினை அடைக்கக் கூலியாளாகப் போந்து மண்சுமந்து, பாண்டியனின் பிரம்பால் அடிபட்டுப் புண்ணும் சுமந்த பொன் மேனியன் அல்லனோ. நம் பெருமான்? எனவே அவனுக்கு 'எடுத்துச் சுமப்பான்' என்று பெயர் கொடுப்பது எத்துணைப் பொருத்தம்!

●

திருக்கோயில்

திங்கள் இதழ்

தனி இதழின் விலை	ரூ. 10/-
ஓராண்டு சந்தா	ரூ. 120/-
ஐந்தாண்டு சந்தா	ரூ. 500/-
பத்து ஆண்டுச் சந்தா	ரூ. 1000/-
ஆயுட்காலச் சந்தா	ரூ. 1500/-

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

திருக்கோயில் இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்

விளம்பரக் கட்டணம் விபரம்

1.பின்பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்)	ரூ. 15,000/-
2.முன்பக்க அட்டை உட்புறம் (வண்ணத்தில்)	ரூ. 10,000/-
3.பின்பக்க அட்டை உட்புறம் (வண்ணத்தில்)	ரூ. 7,500/-
4.உட்புறம் முழுப்பக்கம்	ரூ. 5,000/-
5.உட்புறம் அரைப்பக்கம்	ரூ. 3,000/-

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை

ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை,

119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.

என்ற முகவரிக்கு அனுப்பவும்

ஆனிமாதத்தில் அரன் அருள் பெற்ற நாயன்மார்கள்

அமர்நீதி நாயனார் - ஆனி - பூரம்

சிவனடியார்களுக்குக் கோவணம் வழங்கித் தொண்டு செய்தவர். சிவபெருமானே ஒரு அடியாராக வந்து கோவணம் ஒன்றைக் கொடுத்து பாதுகாக்கச் சொன்னார். பிறகு அது இறையருளால் மறைந்தது. சிவனடியார் மீள வந்து, தாம் கொடுத்த பழைய கோவணத்தைக் கேட்டார். அதற்கு ஈடாக தமது செல்வத்துடன், மனைவி, மக்களுடன் தராசில் ஏறி நின்று, உடல், பொருள், ஆவி மூன்றும் சிவனடியார்களுக்கே என்பதை வெளிப்படுத்தினார். இவருக்கு இறைவன் அருள் பாலித்தார்.

ஏயர்கோன் கலக்காம நாயனார் - ஆனி - ரேவதி

சிறந்த சிவபக்தர். பரவையாரிடம் இறைவனை தூதனுப்பியது பொறுக்காது, சுந்தரரின் மீது கோபம் கொண்டார். இவரை ஆட்கொள்ள எண்ணிய இறைவன், குணப்படுத்த முடியாத சூலைநோயை இவருக்கு தந்தார். இவரது கனவில் இறைவன் தோன்றி சுந்தரர் வந்தால் சூலைநோய்தீருமென்றார். அவ்வாறே சுந்தரரிடமும் கூறினார். சுந்தரர் முகத்தில் விழிக்க விரும்பாது தற்கொலை செய்து கொண்டார். இதனையறிந்த சுந்தரரும் தன்னை மாய்த்துக் கொள்ள முயல இறைவன் அருள் புரிந்து இருவரையும் எழுப்பினார்.

பூனை வணங்கிய வில்லிப்பாக்கம் சிவன்

இறைவனின் தலங்கள் ஒவ்வொன்றுமே ஒவ்வொரு சிறப்புகளுடன் திகழ்கின்றன. சில நோய் தீர்க்கும் தலங்களாகவும், சில தோஷம் நீக்கும் தலங்களாகவும், இன்னும் சில சிவப்பேறு அளிக்கும் தலங்களாகவும் விளங்குகின்றன. அந்த வகையில் சில விலங்குகள், பறவைகள் போன்றவை வணங்கிய தலமாகவும் திகழ்கின்றன. இந்த வகையில் பூனை வணங்கிப் பேறு பெற்ற தலமாகத் திகழ்வது சூணாம்பேடு - வில்லிப்பாக்கம் தலமாகும். இத்தலம் விலங்குகளுக்கு அறியாமல் செய்ததீங்குகளுக்கு தோஷம் நீக்கும் தலமாகவும் விளங்குவது சிறப்பாகும்.

பூனை – வேடுவன்

சிவபெருமானின் வாயில் காப்பாளராகத் திகழும் நந்திதேவருக்கு இரண்டு சீடர்கள்

படங்கள், கட்டுரை பனையபுரம் அதியமான்

இருந்தனர். ஒருவன் காந்தன், மற்றொருவன் மகா காந்தன். இவர்கள் இருவரும் நந்திதேவரின் சிவபூஜைக்கு வேண்டிய பொருட்களைச் சேகரித்துக் கொடுப்பது வழக்கம். அதன்படி ஒரு நாள் காலை பூக்கள் கொண்டுவர இருவரும் சென்றனர். ஒரு குளத்தில் இருந்த வெண்தாமரைப் பூக்களைப் பறித்தனர். அப்போது கைதவறிய ஒன்று நீரிலும், மற்றொன்று கரையிலும் விழுந்தன. நீரில் விழுந்தது மீனாகவும், கரையில் விழுந்தது கிளியாகவும் மாறின. இதனால் வியப்படைந்த அவர்கள், மீண்டும் அதைச் செய்தனர். அந்த விளையாட்டு மிகவும் பிடித்துப்போகவே, மீண்டும் மீண்டும் செய்து கொண்டே இருந்தனர்.

இதற்கிடையில், காலை நேர பூஜைக்கு வராததைக் கண்டு கோபமடைந்த நந்திதேவர், குளக்கரைக்கு வந்தார். சீடர்களின் விளையாட்டுப் போக்கினைக் கண்ட நந்திதேவர், கோபக்கனலுடன் சீடர்களை நோக்கிய போது, காந்தன் பூனை போல் விழித்து கொண்டும் மகா காந்தன் சுரட்டுக்கோலை வைத்துக் கொண்டும் நின்றனர். உடனே நந்தி தேவர், காந்தனைப் பூனையாகவும், மகா காந்தனை வேடுவனாகவும் மாற சாபமிட்டார். பூனையாகவும் வேடுவனாகவும் மாறிய சீடர்கள். தங்கள் தவறை உணர்ந்து சாப விமோசனம் வேண்டினர். இதனால் மனமிரங்கிய நந்திதேவர், "காஞ்சிமாநகருக்குத் தென்கிழக்குத் திசையில் ஐந்து காத தூரத்தில் புண்டரீகப் புஷ்கரணி என்ற தீர்த்தமும், அதனருகில் அகஸ்தீஸ்வரர் என்ற மகாலிங்கமும் உள்ளன. நீங்கள் இருவரும் தனித்தனியே அங்குச் சென்று ஒருவருக்கொருவர் அறியாமல் குளத்தில் மூழ்கி, அகஸ்தீஸ்வரரை வழிபட்டு வாருங்கள். அப்போது நீங்கள் இருவரும் நேருக்கு நேர் சந்திக்கும் போது உங்கள் சாபம் விலகும்" எனக் கூறினார். அதன்படியே பூனையான காந்தன், முதலில் சிவ வழிபாடு செய்து முடிப்பதும், அதன்பின் வேடுவனான மகா காந்தன் பூஜை செய்வதும், தனித்தனியே தொடர்ந்து வந்தது. வேடுவனுக்கு ஒரு ஐயம் இருந்து கொண்டே வந்தது. நாம் பூஜை

செய்வதற்கு முன்பாகவே வேறு யாரோ பூஜை செய்து விடுகின்றனரே. அது யார் என்று தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவல் இருந்து வந்தது. ஒரு வழியாக அதற்கான நேரமும் வந்தது. சீக்கிரமாகவே பூஜை செய்ய முனைந்த வேடுவன் ஆலயம் சென்றான். அப்போது அங்கு ஒரு பூனை சிவனுக்குப் பூஜை செய்து கொண்டிருந்தது. உண்மையை அறிந்து கோபமுற்ற வேடுவன், பூனை மீது அம்பெய்தான். பூனை சற்று நகர்ந்துவிட, அம்பானது சிவலிங்கத்தின் மீது பட்டு ரத்தம் பீறிட்டது. இந்நிலையில், பயந்த வேடுவனும் பூனையும் ஒருவரையொருவர் நோக்க, சாப விமோசனம் கிடைத்தது.

பூனை காந்தனாகவும், வேடுவன் மகா காந்தனாகவும் பழைய நிலைக்கே உருமாறினர். இருவரும் வியப்பும் நடுக்கமும் மேலிட்டு சிவபெருமானை வேண்டி நின்றனர். பெருமானுக்கு ஏற்பட்ட இடையூறினை மன்னிக்குமாறு வேண்டி நின்றனர். இறைவனும் அவர்களுக்கு அருள் வழங்கினார். அன்றுமுதல் இறைவன் திருப்பெயர் கிராத மார்ஜாலீஸ்வரர் என்றும், இவ்வூர் கிராத மார்ஜாலபுரம் என்றும்,

வழங்கப்பட்டது. கிராதன் என்பதற்கு வேடுவனும், மார்ஜாலம் என்பதற்கு பூனை என்பதும் பொருள்.

கங்கையின் பாவம் நீங்கிய தலம்.

அனைவரின் பாவத்தைப் போக்கும் அன்னையாக விளங்கும் கங்கை. தன் தோஷத்தை நீக்கிக்கொள்ள இறைவனை வேண்டிநின்றாள். அப்போது தோன்றிய இறைவன் இத்தலத்தின் பெருமையைக் கூறி, புண்டரீக தீர்த்தத்தில் நீராடி, மகாலிங் கத்தை வணங்கினால், தோஷம் நீங்கு மென்று அருளினார். அவ்வாறே செய்த கங்கை தன் தோஷங்களை நீக்கியதாகப் புராணம் கூறுகிறது. அன்று முதல் இவ்வூர் கங்கை கொண்ட சோழபுரம் என்றும் வழங்கப்பட்டது. இப்பெயர் இவ்வாலயக் கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது.

அகத்தியர் வழிபட்டது

கயிலையில் நடந்த சிவன், பார்வதி திருமணத்தைக் காண, எண்ணற்ற தேவர்களும் ரிஷிகளும் கயிலாய மலையில் கூடி நின்றதால், பூமியின் சமநிலை பாதிக்கப்பட்டது. இதனால் தென்திசை மேலெழும்ப ஆரம்பித்தது. உயிரினங்கள் பீதியடைந்தன. இதனைச் சரிசெய்ய இறைவன், அகத்தியரிடம் தென்திசை நின்று பாரத்தைச் சரிசெய்ய பணித்தார். அதன்படியே அகத்தியர் தன் கமண்டலத்தில் எண்ணற்ற பாணலிங்கங்களை எடுத்துக் கொண்டு தென்திசையை நோக்கிச் சென்றார். வழியில் சிவபூஜைக்குரிய காலங்களில் தன் கமண்டலத்திலிருந்து பாணலிங்கங்களில் ஒவ்வொன்றாக வைத்து பூஜை செய்து காஞ்சி மாநகரம், திருக்கழுக்குன்றம் கடந்து ஒரு வில்வ வனத்தைக் கண்டார். அப்போது பூஜைக்குரிய நேரம் வந்துவிட்டது. அங்கிருந்து தீர்த்தத்தில் நீராடி, வெளியே வந்தபோது அங்கே கொன்றை மரத்தடியில் ஒரு மகாலிங்கம் இருப்பதைக் கண்டு வியப்படைந்தார். அவரை வணங்கி தனது பூஜையை நிறைவு செய்தார். அதன் அருகில் வழக்கமான முறையில் ஒரு பாண லிங்கத்தையும் பிரதிஷ்டை செய்தார். அன்று முதல் அந்த இறைவனுக்கு மகாலிங்கம் என்றும், அகஸ்தீஸ்வரர் என்றும் பெயர் விளங்கியது. இதன்பின் பொதிகை மலை சென்று பூமியைச் சமன்படுத்தினார்.

தெய்வங்கள் பூசித்தது

மகாபலி சக்ரவர்த்தி வதம் செய்த திருமால் தன் தோஷம் நீங்க, இத்தலத்து இறைவனை வணங்கியதால் தோஷம் நீங்கியதாகவும், இதேபோல, பிரம்மதேவன் படைப்புத் தொழிலில் மேம்படவும், தேவேந்திரன் அகலிகை வஞ்சித்த தோஷம் நீங்கவும், சந்திரன், தட்சன் செய்த யாகத்திற்குத் தடையாக இருந்ததால் ஏற்பட்ட தோஷ த்தையும் இத்தலத்து இறைவன் நீக்கியதாகக் கூறப்படுகிறது.

இறைவன் – இறைவி

தெற்கு நோக்கிய எளிய வாயில் இராஜகோபுரமின்றி அமைந்துள்ள வாயிலைக் கடந்ததும் கொடிமரம் நம்மை வரவேற்கிறது. அதன் நேரே வலது புறம் தனி அம்பாள் சன்னதி அமைந்துள்ளது. அன்னையின் பெயர் மௌத்திகாம்பாள் என்றும், முத்தாம் பிகை என்றும் வழங்கப்படுகிறது. எளிய வடிவில் அன்னை அருள் வழங்கும் காட்சி மெய் சிலிர்க்க வைக்கிறது.

இச்சந்நிதியைக் கடந்து மேற்கு நோக் கினால், கருவறையில் மூலவர் அகஸ்தீஸ்வரர் கம்பீரமாகக் காட்சி தருகின்றார். தெய்வங் களும் தேவர்களும் விலங்குகளும் வழிபட்ட தெய்வம் இவரே. இவ்வாலயத்தில் புடைப்புச் சிற்பமாக ஏகபாத மூர்த்தி சிற்பம் தட்சிணா மூர்த்தியின் அருகே அமைந்துள்ளது. அதே போல மூலவர் கருவறையின் பின்புறம் ஆலய ஐதீகங்களை நினைவுபடுத்தும் வகையில் கிராதநாதர், கங்காதேவி, வேடுவன் ஆகியோர் சிலைகளும் அமைந்துள்ளன.

தீர்த்தம்

ஆலயத்தின் எதிரே புண்டரீக புஷ்கரணி என்ற திருக்குளம் அமைந்துள்ளது.

தலமரம்

இத்திருக்கோயிலின் தலமரம் சரக்கொன்றை. இது ஆலய வளாகத்திற்குள் அமைந்துள்ளது.

அமைவிடம்

காஞ்சிபுரம் மாவட்டம் செய்யூர் வட்டத்தில்,

தூணாம்பேடு அருகே அமைந்துள்ளது. சென்னையிலிருந்து தென்மேற்கே 110 கி.மீட்டர், புதுச்சேரியிலிருந்து வடமேற்கே 40 கிலோ மீட்டர் தொலைவிலும், மதுராந்தகத்திலிருந்து கிழக்கே 25 கிலோ மீட்டர் தொலைவிலும் வில்லிப்பாக்கம் அமைந்துள்ளது. சென்னை புதுச்சேரி கிழக்குக் கடற்கரைச் சாலையில் வெண்ணாங்குபட்டு என்ற இடத்திலிருந்து மேற்கே 4 கிலோமீட்டர் தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது. வெண்ணாங்குபட்டிலிருந்து ஷேர் ஆட்டோ வசதி உள்ளது. மதுராந்தகத்திலிருந்து தூணாம்பேடு வழியாகவும், வில்லிப்பாக்கம் வரலாம். தூணாம்பேட்டிற்கும் வில்லிபாக்கத்திற்கும் ஒரு கிலோமீட்டர் தொலைவு மட்டுமே.

கல்வெட்டு

இவ்வாலயக் கருவறை மேற்குச்சுவரில் விக்கிரம பாண்டிய தேவனின் கல்வெட்டொன்று காணப்படுகிறது. இக்கல்வெட்டு கி.பி 1919 ஆம் ஆண்டு தொல்லியல் ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில் இறைவனின் பெயர் திரு அகஸ்தீஸ்வரமுடைய நாயனார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வூர் வில்லிவாக்கம் என்கிற கங்கை கொண்ட சோழ நல்லூர் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து ஒய்மா நாடு என்கிற விஜய ராஜேந்திர வளநாட்டில் இவ்வூர் அமைந்துள்ளது. இக்கல்வெட்டின் மூலம் இறைவனுக்கு விளக்கெரிக்க பணம் கொடுத்த செய்தி கூறப்பட்டுள்ளது.

விழாக்கள்

விநாயகர் சதுர்த்தி, ஆருத்ரா உற்சவம், நவராத்திரி, சிவராத்திரி, பிரதோஷம், போன்ற அனைத்து விழாக்களும் எளிய முறையில் சிறப்புடன் நடைபெறுகின்றன.

தரிசன நேரம்

இத்திருக்கோயில் காலை 6 மணி முதல் பகல் 11.30 வரையிலும், மாலை 5 மணி முதல் இரவு 7.30 மணி வரையிலும் திறந்திருக்கும். அர்ச்சகரின் வீடு ஆலயத்தை ஒட்டியே அமைந்துள்ளது.

இவ்வாலயம் கிராமத்தில் அமைந்திருந்தாலும், தூய்மையின் சின்னமாக அமைந்துள்ளது குறிப்பிடத் தக்கது. மூலவரும் உற்சவரும் பூத்த புதுமலர்களாகப் பராமரிக்கப்பட்டு வருவதற்கு ஆலய அர்ச்சகரைப் பாராட்ட வேண்டும்.

பூனைக்குப் பேறு தந்த தலமாக இது விளங்கினாலும், பூனை உள்ளிட்ட எந்த விலங்குகளுக்கும், மனிதர்கள் தாங்கள் அறியாமல் செய்த பாவங்களும் தோஷங்களும் இத்தலத்து இறைவனை வழிபடுவதன் மூலம் விலகும் என்பது ஐதீகமாக உள்ளதால், சம்பந்தப்பட்டவர்கள் இங்கு வந்து வணங்கி வழிபாடு செய்வது நன்மை தரும்.

பிதுர்முக்தியைத் தரவல்ல திருத்தலம்

"மனமார்தரு மடவாரொடு
மகிழ்மைந்தர்கள் மலர்தூய்த்
தனமார்தரு சங்கக்கடல் வங்கத்திர
ளுந்திச்
சிரமார்தரு திறல்வாளெயிற் றரக்கன்
மிகுகுன்றில்
இனமாதவர் இறைவர்க்கிடம்
இடும்பாவனம் இதுவே"
–திருஞானசம்பந்தர்

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப் பூண்டி அருகே சுமார் 12 கி.மீ தொலைவில் அமைந்துள்ள திருத்தலம் இடும்பாவனம் எனும் திருத்தலம்.

இத்திருத்தலத்தில் வீற்றிருந்து அருள் பாலிக்கும் அருள் தரும் மங்களநாயகியம்மை உடனாய சற்குண நாதசுவாமி, பித்ருக்களின் பாவத்தைப் போக்கி முக்தியை அளிப்பவராகவும், துர்மரணத்திற்கு முக்தியை அளிப்பவராகவும், மரண வேதனையைப் போக்கி ஆரோக்கியமான வாழ்வு அளிப்பவராகவும், திருமணமாகாதவர்களுக்கு விரைவில் திருமணம் நடைபெற அருள் பாலிப்பவராகவும் விளங்கி வருகின்றார்.

சோழ வளநாட்டில் காவிரி நதியின் தென்கரையில் 108 வது திருத்தலமாக அமைந்துள்ளது இடும்பாவனம் திருத்தலம். திருநாவுக்கரசு சுவாமிகளாலும், திருஞானசம்பந்தராலும் பாடப்பெற்ற பாடல் பெற்ற திருத்தலம். அருட்பிரகாச வள்ளலார், இராமலிங்க அடிகள் தமது விண்ணப்பக் கலி வெண்பாவில் இத்தலத்தைப் பாடியுள்ளார்.

எம்பெருமான் தன் திருமண விழாவிற்கு வருகை தந்த உலகத்தவர் அனைவராலும் வடதிசை தாழ்ந்து தென்திசை உயர, அதனை சமப்படுத்த தென்திசைக்கு அகத்திய மாமுனிவரை அனுப்பிவைத்தார். இதன்பொருட்டு வந்து இத்திருப்பதியிலிருந்த அகத்தியருக்கு பிரம்மதேவன் மண வேள்வி நடத்திட, உலகிலுள்ள இருடிகள் முதலியோரும் சிவகணங்களும் சூழ எம்பெருமான் பார்வதி பிராட்டியோடு பல்வேறு வாத்யங்கள் முழங்க விடையேறிய மர்ந்த காட்சி முதல் மங்களப் பொறி சிந்தி, அம்மி மிதித்து அரசாணி வலம் வரும் காட்சி வரை இமயமலையில் நிகழ்ந்தவற்றை இடும்பாவனத்தில் அகத்தியருக்கு காட்சியருளிய திருத்தலம்,

அம்மையார் மங்கலக் கோலத்துடன் காட்சியளித்தமையால் மங்களநாயகியார்

என்று வழங்கப்பட்டனர். திருமணக் கோலங் காட்டப்பட்ட திருத்தலமாதலால் மணக்கோல நகர் என்றும் வழங்கப்படுகிறது.

மார்க்கண்டேயருக்காக சிவபெருமான் மறலியைக் கொன்றார். இதனால் உயிர்கள் இறப்பின்றி பிறப்பு மட்டும் நிகழ பூமிதேவி பாரம் மிகுந்தது. இதனால் துயருற்ற பூமிதேவி தனது துன்பத்தை துடைத்தருள பிரம்மன், இந்திரன் முதலிய தேவர்களுடன் எம்பெருமானை வேண்டினார்.

இக்குறை நீக்கியருளிய எம்பெருமான், தம் கதாயுதத்தை தூக்கக்கூட சக்தியற்றிருந்த எமனுக்கு சத்துவகுண தலமாகிய இத்திருத்தலத்தில் கிரியா சக்தியை வழங்கியருளினார், கிரியா சக்தியைப் பெற்ற எம தர்ம ராஜன் பெரிதும் மகிழ்ச்சி கொண்டு இத்தலத்தின் தென் கீழ் திசையில் ஒரு தீர்த்தம் அமைத்து, அதில் நீராடு வோருக்கு மரண வேதனை இல்லாதிருக்கும் படி சங்கல்பம் செய்தார், அத்தீர்த்தம் எம தீர்த்தம் என்றழைக்கப்படுகிறது.

இந்த எம தீர்த்தத்தில் நீராடுபவர்கள் மரண வேதனை அடைய மாட்டார்கள். என்பது திண்ணம். மேலும் உயிர்களுக்கு இன்றியமையாத இச்சாசக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி ஆகிய சக்திகளை இத்திருத்தலம் அளிக்கும் பெருமையுடையது என தெரிந்து கொள்ளலாம்.

பித்ருக்களுக்கு முக்தியை தரவல்ல திருத்தலம்:

தென்புலத்தார் என்று சொல்லப்படுகின்ற பித்ருக்களை நோக்கி அவர் மரபிற் பிறந்தோர் செய்யும் புண்ணியங்களின் பயன், பித்ருக்களின் பாவத்தை போக்கி, அவர்களுக்கு முக்தியை அளிக்கும். எனவே பித்ரு கடன் செய்வதற்கு ஏற்ற திருத்தலமாக இடும்பாவனம் விளங்குகின்றது. பிதிரர்களுக்குச் செய்ய வேண்டியவற்றைச் செய்தல் இல்லறத்தாருக்கு முதற் கடமையாகும்.

இறந்த தம்முன்னோரைக் குறித்து இத்தலத்தில் செய்யப்படுகின்ற மகேசுவரபூஜை பல தலைமுறைக்கு முன்னர் இறந்த ஆத்துமாக்களையும் முத்தியில் சேர்க்கின்றது. தம்முடைய மனதில் பிதிரர்களின் நாமத்தைச் சிந்தனை செய்து கொண்டு அவர்கள் பெயரால் அர்ச்சனை செய்வித்தல், பிதிரர்களுக்கு முக்தியை நல்குவதாம்.

சிறந்த நட்சத்திரங்களான திருவாதிரை, பரணி, மகம், பூசம் ஆகிய நாட்களிலும், மாதங்களான வைகாசி, ஐப்பசி, தை மாதங்களிலும், சிறந்த கிழமைகளான திங்கள், வெள்ளியும், சிவராத்திரி நன்நாட்களில் வழிபடுவோரின் பித்ருக்கள் முக்தி அடைவர்.

மகேஸ்வர பூஜை, அர்ச்சனை செய்ய இயலாதவர்கள், தம் பிதுரர்களை நினைத்து எம தீர்த்தத்தில் நீராடி தல விருட்சமாகிய வில்வ மரத்தின் கீழிருந்து 108 அல்லது 1008 முறை திருவைந்தெழுத்தைப் பக்தியுடன் ஓதினால் அவர்கள் பித்ருக்களும் முக்தியடைவது திண்ணம்.

துர் மரணத்திற்கு முக்தி தரவல்ல திருத்தலம்:

இடிவீழ்ந்து இறத்தல், பாம்பு தீண்டி இறத்தல், நஞ்சுண்டு இறத்தல், தீய விலங்குகளால் இறத்தல் முதலிய இறப்பிற்கு ஆளானவர்களுடைய உயிர்கள் நரகத்தை அடைகிறது.

முன்னொரு காலத்தில் யோகீஸ்வரன் என்பவன் தன் மனைவி மக்களுடன் வாழ்ந்து வந்தான். ஒரு நாள் பெருமழையுடன் கூடிய இடிவிழுந்து இறந்தமையால் அவன் நரக துன்பத்தை அடைந்தான். அவனுடைய மக்களில் சிறந்த குணமுடையவனும் மூத்தவனுமான குணபரன் என்பவன் தன் தந்தைக்கேற்பட்ட மரணத்திற்கும், அதன் காரணமாக அவன் நரகம்புகுவான் என்ற ஐதீகத்திற்கும் வருந்தி, தந்தையை முக்தி பெறச் செய்ய ஒரு சான்றோனிடம் வினவினான். அவர் தந்தையின் பொருட்டு இங்ஙனம் முயலுகின்ற உன் செயல் மிக நன்று. உன் தந்தையின் அஸ்தியை தூய புது மண்பாண்டத்தில் வைத்து அதனைக் கொண்டு தமிழகத்தில் சிறந்த திருக்கோயில்களுக்கெல்லாம் நீ செல்ல வேண்டும். அந்த திருத்தலங்களில் உள்ள தீர்த்தங்களில் அஸ்தியிட்ட மண் பாண்டத்தையிட்டு நீராடியபின் மீண்டும் அதனை நீரினின்றும் எடுத்துப்பார்.

அப்பாண்டத்தில் உன் தந்தையின் உருவம் தோன்றினால் உன் தந்தை நரகினின்றும் விடுதலை பெற்றான் என்று அறிந்து கொள் எனக்கூறினார். அதே போன்று பல் தலங்களில் பாண்டத்துள் இருந்த அஸ்தியைத் தவிர பிறி தொன்றும் காணாது ஏங்கினான். திருமுதுகுன்றத்தில் அஸ்தி பொன்னாகக் காட்சி நல்கியது. திருமறைக்காட்டில் அஸ்தி தாமரை மலராக காட்சி நல்கியது. அக்காட்சிகள் குணபரனுக்கு திருப்தி தரவில்லை. மேலும் யாத்திரையில் முயன்றான். திருக்கடிக்குளத்தில் அஸ்தி கொன்றை மாலையாய்த் தோன்றியது.

குணபரன் அஸ்திப் பாண்டத்துடன் திரு இடும்பாவனம் என்னும் திருக்கோயிலை அடைந்து சீதபுட்கரணியில் அஸ்தியை வைத்து நீராடிய பின் மீண்டும் பாண்டத்தை வெளியில் எடுத்துப் பார்த்தான். பாண்டத்தினுள் அவன் தந்தை யோகீஸ்வரனுடைய திருவுருவம் நன்றாகக் காட்சியளித்தது. அவரது தந்தை என் அருமை மைந்தனே இடியினால் இறந்த நான் இதுவரையில் நரகத்தில் உழன்று துன்புற்றேன். நன் மகனாகிய நீ செய்த முயற்சியால் நரக வாழ்க்கை அகன்றது. இன்று அந்தமில்லாப் பேரின்பப் பெருவாழ்வடைந்தேன். நீ நீடூழி வாழ்க என வாழ்த்தி மறைந்தது.

எனவே, இத்தீர்த்தத்தில் நீராடினால் துர்மரணத்தினால் இறந்தவர்களுக்கு முக்தியை அளிக்க வல்லது. குடும்பத்தினர் தங்கள் குடும்பத்தில் துர்மரணம் நிகழ்ந்திருந்தால் இத்தலத்து இறைவனை வழிபட்டால் அந்த உயிர் முக்தி அடையும். அதனால் அந்த சந்ததியினர் எந்தவித துன்பமின்றி பெருவாழ்வு வாழ்வார்கள் என்பது திண்ணம்.

திருக்கோயில் திருப்பணி

இத்திருக்கோயில் சோழர் காலத்தில் எடுக்கப்பட்ட பழங்கோயில் என்பதற்கு அதன் மண் மதில் முதலியன சான்றாக இருந்தன. பிறகு 1906ம் ஆண்டில் தரும கர்த்தாவாக இருந்த குன்னியூர் பிர்மஸ்ரீ இராமையர் அவர்கள் நன்முயற்சியால் திருப்பணி செய்து கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. அதன் பிறகு தற்போது 2009ல் திருப்பணி செய்து குடமுழுக்கு செய்யப்படுகிறது.

திருமணமாகாதவர்கள் இத்தலத்து இறைவனை வழிபட்டால் திருமணம் விரைவில் கைகூடும். மேலும் இத்திருத்தலத்தில் திருமணம் செய்து கொள்பவர்கள் வாழ்வில் எல்லா வளமும் நலமும் பெற்று பெருவாழ்வு வாழ்வார்கள் என்பது திண்ணம்.

திருநாமப் பெருமை

ஸ்ரீமந் நாராயணன் உலகம் யாவையும் படைத்து அவற்றின் உள்ளும் புறமும் பரவி நின்று, அவற்றிலுள்ள அனைத்து உயிரினங் களையும் காத்து, கருணை புரிந்து வருகின் றான். அவனுக்குப் பல கோடி நாமங்கள் உள்ளன. அவற்றில் ஓராயிரம் நாமங்களைத் தொகுத்து "ஆழியான் நாமம் ஆயிரம்" (ஸ்ரீவிஷ்ணு சகஸ்ரநாமம்) கொண்ட தொகுப்பை நமக்கு ஸ்ரீநிவாச பகவான் அளித்தார். இதனை மகாபாரதத்தின் சாரமாக ஸ்ரீ பீஷ்மாசாரியார் தருமபிரானுக்கு கண்ணபிரான் முன்னிலையிலேயே கூறினார். இதனையே

"தொண்டக்குலத்திலுள்ளீர் வந்தடி தொழுது
ஆயிர நாமம் சொல்லி"
"பேருமோர் ஆயிரம் பிற பலவுடைய எம்பெருமான்"
"பேராயிரமுடைய பேராளன்"
"பேராயிரங் கொண்டதோர் பீடுடையான்"
என்று ஆழ்வார்களும்
"மாமாயன் மாதவன் வைகுந்தன்
என்றென்று நாமம் பலவும் நவின்று"
என்று ஆண்டாளும்;
"பேராயிரம்... அவ் அரியனுக்கே"

என்று கம்ப நாட்டாழ்வாரும் சிறப்பித்துக் கூறியுள்ளார்.

அடுத்து ஆயிரத்தையும் சுருக்கி 108 அஷ்டோத்திர நாமங்களாகவும், அவற்றையும் சுருக்கி 12 துவாதச நாமங்களாகவும், அவற் றையும் சுருக்கி 8 எழுத்துக்களைக் கொண்ட திருமந்திரமாகவும், அவற்றையும் சுருக்கி 3 எழுத்துடைய விஷ்ணு என்ற நாமமாகவும் நமக்கு அளித்துள்ளனர் சான்றோர்.

இப்படி எம்பெருமானுக்குப் பல்வகையான திருநாமங்கள் இருந்தாலும் யார் ஒருவர் எந்த பேரை இட்டு அழைத்தாலும் அந்த பெயரை ஏற்று, ஓடோடி வந்து அருள்புரிகின்றான். இதனையே 'தமர் உகந்தது எப்பேர் மற்று அப்பேர்தானே' என்றார் நம்மாழ்வார்.

திருநாமம் சொல்வதன் பயன்:

ஸ்ரீ நம்மாழ்வார்
வைகாசி - விசாகம் (திருக்குருகூர்)

புலவர் ஏ.பரந்தாம ராமானுஜதாசன் எம்.ஏ. பி.எட்.,

எம்பெருமானை அடைவதற்கு கர்மயோகம், ஞான யோகம், பக்தி யோகம் போன்ற பல வழிகள் இருந்த போதிலும், ''அவன் திருநாமம் சொல்வதே'' (நாமசங்கீர்த்தனம்) எளியதும் சிறந்ததுமாகும். அதன் பலனைக் காண்போம்.

எம்பெருமான் நமது சட்புலனுக்கு அகப்படாமல் வெகு தூரத்திலிருந்தாலும், அவனது திருநாமம் சொன்னால் அது நமக்கு அருகில் நின்று உதவும். இதனையே,

"அவன் தூரத்தனானாலும் அது கிட்டி நின்று உதவும்'' என்று முமுட்சுப்படி கூறுகின்றது. கட்டிப் பொன்னை உடனே அணிய முடியாது. அதை வெட்டி, உருக்கி, நகைகளாகச் செய்தால்தான் அணிய முடியும். ஆனால், நகைப் பொன்னையோ விரும்பிய உடனே அணிந்து மகிழலாம். எம்பெருமான் கட்டிப் பொன் போன்றவன். அவனைப் பக்தி யோகம், ஞான யோகம் போன்றவற்றால் தான் அடைய முடியும். அவன் திரு நாமமோ பணிப்பொன் அதாவது நகைப் பொன் போன்ற நமக்கு அருகில் நின்று உடனே உதவும்.

கேசவன் எனும் அவன் பெயரினைச் சொன்னால் நமது துன்பம் அனைத்தும் கெட்டு ஒழியும். இதனையே

"கேசவா என்னக் கெடும் இடர் ஆய எல்லாம்" என்றார் நம்மாழ்வார். நாராயண நாமத்தைச் சொன்னால், உணர்வெனும் பெரும்பதம் தெரியும். உய்யும் வழி அறியலாம். நற்பொருள் காணலாம்.

திருநாடு அடைய வழி அறியலாம். ஞானமாகிய குலத்தையும், கைங்கர்யமாகிற பெருஞ்செல்வத்தையும், பரம பதத்தையும், பேரானந்தத்தையும், பல நன்மைகளையும், அவரவர் விரும்பியதையும் பெற்ற தாய் தரும் உதவியை விடச் சிறந்த உதவிகளையும் பெறலாம் என்றும் முக்கால துன்பங்களும் தீரும் என்றும் ஆழ்வார்கள் கூறியுள்ளனர்.

இதனையே

"குலம்தரும் செல்வம் தந்திடும்
அடியார்
படுதுயராயின் வெல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும் பருளும்
அருளொடு பெருநில மளிக்கும்
வலம் தரும் மற்றும் தந்திடும் பெற்ற
தாயினுமாயின செய்யும்
நலம் தரும் சொல்லை நான்கண்டு
கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்"

என்றார் திருமங்கையாழ்வார்.

ராம நாமத்தைச் சொன்ன ஜடாயுவுக்கு ஈமக்கிரியைகளைச் செய்ததோடன்றி, மோட்சத்தையும் கொடுத்தான் சக்ரவர்த்தித் திருமகன். ஆதிமூலமே என்றழைத்த கஜேந்திர ஆழ்வானை முதலையினிடத்திலிருந்து காப்பாற்றி மோட்சத்தைக் கொடுத்தான்.

இதனையே,

"ஆனையின் துயரம் தீரப்புள்ளூர்ந்து
சென்றுநின்று
ஆழிதொட்டானை,"

என்றார் திருமங்கையாழ்வார்.

அஜாமினன் சாகும் தருவாயில், தன் பிள்ளையை 'நாராயணா' என்றழைக்க, மோட்சமடைந்தான்.

இதனையே,

"நாராயணன் தன் அன்னை
நரகம்புகாள்"
என்றார் பெரியாழ்வார்.

திரௌபதி தன் மானத்தைக் காக்க, "துவாரகவாசா" "அச்சுதா" "ஆபத்பாந்தவா" என்று கதறியபோது ஆடை சுரந்து அவள் மானத்தைக் காத்தான்.

இதனையே,

திரௌபதிக்கு ஆபத்திலே புடவை சுரந்தது திருநாமமன்றே" என்கின்றது முமுட்சுப்படி. ஹரிநாமம் சொல்லி, எங்குமுள்ளான் என்று வாதிட்டு தந்தையின் தொல்லைகளால் துயர் அடைந்த பிரகலாதனுக்காக நரசிங்கமாகத் தோன்றி இரணியனை அழித்துக் காத்தார் திருமால்.

இதனையே,

"எங்குமுளன் கண்ணன் என்ற
மகனைக் காய்ந்து இங்கு
இல்லையாவென்று இரணியன்
தூண்புடைப்ப
அங்கு அப்பொழுதே அவன் வீயத்
தோன்றிய சிங்கப்பிரான்"

என்றார் நம்மாழ்வார்.

இத்துணையாகத் ' துணையிருந்த

நாமங்களின் பெருமையினைப் பல்லோர் திருவாக்கால் அறியலாம்.

"நீ நாம ரூப உலகு நித்ய ஜய மங்கள மென்றும்"

''கண்ணன் கழலிணை நண்ணும் மனமுடையீர் எண்ணும் திருநாமம் திண்ணம் நாரணமே'' என்று நாராயண நாமத்தின் பெருமையை நம்மாழ்வாரும்;

'வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப் போய பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்," என்று **ஆண்டாளும்.**

முற்கலன் "சர்வம் கிருஷ்ணார்ப்பணம் என்று சொன்னதால் எமனால் வரவேற்கப்பட்டான். கத்திரபந்து கோவிந்த நாமத்தைச் சொன்னதால் பரகதி கண்டு கொண்டான் என்று தொண்டரடிப் பொடியாழ்வாரும்,

''கடியரங்கத் தரவணையில் பள்ளி கொள்ளும் மாயோனை வாயார என்று கொலோ வாழ்த்தும் நாளே' என்றும்

"திருமாது வாழ் மார்பனை வாழ்த்தி ஆடிப்பாடி அரங்கவோ என்றழைக்கும் நாளும் நாத்தழும்பு எழ நாரணா என்றழைத்து ஆடிப்பாடி யிறைஞ்சும் நாளும் எந்நாளோ,'' என்று குலசேகராழ்வாரும்

''நாம சங்கீர்த்தனத்தாலே வாசுதேவனை அடைந்து அவனையே மேலான புகலாகக் கொண்ட மனிதன் எல்லா பாபங்களிலிருந்தும் விடுபட்ட சொரூபத்தை உடையவனாய் பரம்பொருளாகிய எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனை அடைகின்றான்," என்று கீதையில் கண்ணபிரானும் நன்கு விளக்கியுள்ளனர்.

''நாமசங்கீர்த்தனமே அனைத்து பாபங்களையும் போக்குகிறது," என்பதை

நாம சங்கீர்த்தனம் விஷ்னோ, சர்வபாப பிரணாசநம்" என்று ஸ்ரீமத் பாகவதரும்.

"பகவானின் எல்லா உருவங்களையும் தேடி, காண முடியாமல் அவன் திருநாமங்களைப் பற்றி வாழ்கின்றான்," என்று மார்க்கண்டேய புராணமும்,

"நாராயணன் உலகறிந்த திருடன் என்றும், அவன் நாமத்தைச் சொல்லைக் கேட்டவுடனே பல பிறவிகளில் செய்து, சேர்த்து வைத்த பாப மூட்டைகளை யெல்லாம் திருடிக் கொண்டு செல்வான்'' என்று வாமன புராணமும்,

மாதவன் பேர் சொல்லுவதே வேதத்தின் சுருக்கமான கருத்து, ''மாதவன் பேர் சொல்லுவதே ஒத்தின் சுருக்கு' என்று பொய்கையாழ்வாரும்

"உன் நாமக் கூட்டங்களை நினைத்து, பாடியே எங்களது காலம் கழிப்போம்" என்று நாராயண பட்டரும்,

வேதங்களும், உபநிடதங்களும், அந்தணர்களும், தேவர்களும் முனிவரும் சொல்லுவது உன் நாமம் தவிர வேறில்லை.

''அந்தணர், அருமறையறிந்தோர், உபநிடதங்கள், தேவரும், முனிவரும் உம்பேரைச் சொல்லுவதல்லது பிறிதொன்றுளதோ'' என்று கம்ப நாட்டாழ்வாரும்,



திருமங்கையாழ்வார்
கார்த்திகை - கார்த்திகை (திருக்குறையலூர்)

"உன் நாம பலம் ஒன்றே எனக்குப் போதுமானது," என்று புரந்தரதாசரும்,

ஹரிநாமம் மிகவும் இனிமையானது, அமிர்தமானது, ஆனந்தமானது' என்று துர்காராமும், "ஒருவித சிரமமும் இல்லாமல், மிகவும் சுலப்மாக ஸ்ரீ பகவான் நாம சங்கீர்த்தனத் தாலே எல்லா பலன்களையும் அடையலாம் என்று விஷ்ணு புராணமும் பாகவதமும் "பகவந் நாமங்களை நாவினால் உரைத்தால் இம்மைக்கும் மறுமைக்கும் உறுதி பயக்கும்" என்று சங்கத் தமிழ் நூல்களும் கூறுகின்றன. எம்பெருமான் திருநாமத்தை எப்பொழுதும் ஊக்கத்துடன் துதி செய்பவன் அனைத்து துன்பங்களிலிருந்தும், பயங்களி லிருந்தும் விடுபடுகிறான் என்றும், "அவன் நாமம் சொல்வதே அனைத்து தர்மங்களிலும் சிறந்தது,'' என்று பீஷ்மாச்சாரியும் கூறியுள்ளார்.

மற்றும் ஆத்ம சுகம், பொறுமை, ஞானம் (உண்மைப் பொருள்), புகழ், தலைமை, பதவி, நோயற்ற வாழ்வு, நற்குணங்கள் போன்ற பலவற்றை அடைவதோடு ஜனனம், மரணம், மூப்பு, நோய், கோபம், தீயஎண்ணம், தீய குணம், பேராசை போன்றவைகளிலிருந்து விடுபடவும் முடியும்.

இதுவரை கூறிய கண்ணபிரான் திருவாக்காலும் வேத வாக்கியங்களாலும், ஆழ்வார்கள் அருளிச் செயலாலும், மகான்களின் வாக்கினாலும், பக்தர்களின் பொன் மொழியாலும் வாழ்க்கை வரலாறுகளாலும் திருநாமத்தின் உண்மைப் பெருமையைக் கண்டோம். கலியுகத்தில் நாம சங்கீர்த்தனமே ஸ்ரீமந் நாராயணன் திருவருளைப் பெறவும், அவனது திருநாட்டை அடையவும், தீமைகளை ஒழித்து நன்மை களைப் பெறவும் ஒரே சிறந்த வழியாகும்.

எனவே நாம் அனைவரும்,

"துஞ்சும்போது அழைமின் துயர்வரில் நினைமின் துயரிலீர் சொல்லினும் நன்றாம்"

என்னும் திருமங்கையாழ்வார் அருளிச் செயலுக்கு இணங்க ஸ்ரீமந் நாராயணன் பெயரை ஆடிப் பாடி அகம் குழைந்து பாடிப் பாடி பரவசம் அடைந்து, நாடி நாடி 'திரு நாடு அடைவோமாக".

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

நித்ய ஸ்ரீ நித்ய மங்களம்.

சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கு

நூல்		ஆசிரியர்
1. திருவுந்தியர்	–	திருவியலூர் உய்யவந்த தேவனார்
2. திருக்களிற்றுப் படியார்	–	திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார்
3. சிவஞான போதம்	–	மெய்கண்டார்
4. சிவஞான சித்தியார்	–	அருணந்தி தேவ நாயனார்
5. இ ருபா இருபஃது	–	அருணந்தி தேவ நாயனார்
6. உண்மை விளக்கம்	–	மனவாசகம் கடந்தார்
7. சிவப்பிரகாசம்	–	கொற்றவன் குடி உமாபதி தேவ நாயனார்.
8. திருவருட் பயன்	–	கொற்றவன் குடி உமாபதி தேவ நாயனார்.
9. வினா வெண்பா	–	கொற்றவன் குடி உமாபதி தேவ நாயனார்.
10. போற்றிப் பஃறொடை வெண்பா	–	கொற்றவன் குடி உமாபதி தேவ நாயனார்.
11. கொடிக்கவி	–	கொற்றவன் குடி உமாபதி தேவ நாயனார்.
12. நெஞ்சு விடு தூது	–	கொற்றவன் குடி உமாபதி தேவ நாயனார்.
13. உண்மை நெறிவிளக்கம்	–	கொற்றவன் குடி உமாபதி தேவ நாயனார்.
14. சங்கற்ப நிராகரணம்	–	கொற்றவன் குடி உமாபதி தேவ நாயனார்.

பக்திக்கு ஒரு பசுபதி நாயனார்

வெய்யலூர் தலத்தில் வாழ்ந்த வீர சைவ மரபினரான பசுபதி நாயனார் சிறிதும் நினைத்திருக்கமாட்டார் இப்படி ஆகும் என்று. சிவபெருமான் பால் அளவற்ற அன்பு கொண்ட இவர், ஒரு சமயம் வேதாகமப் புராணங்களைப் படித்துக் கொண்டிருந்தார். மனம், மொழி, மெய்யால் ஒன்றி இருந்த நாயனாருக்கு பேரதிர்ச்சி தரும் தகவல் ஒன்று அதில் விவரிக்கப்பட்டிருந்தது.

பாற்கடல் கடையப்பட்டபோது தோன்றிய நஞ்சை உலக நன்மைக்காக சிவபெருமானே உண்ட செய்தியே அது. அய்யகோ! இதென்ன கொடுமை–ஆலகால விஷம் பெரும் ஆபத்தை விளைவிக்கும் அன்றோ? நாயனார் பதறினார். கைகால்கள் நடுங்க மயக்கமுற்று விழுந்தார்.

உயிரையே மாய்க்கக் கூடிய விஷத்தை சிறிதும் ஆராயாமல் எடுத்து விழுங்கலாமா? பக்கத்தில் யாரும் இல்லையா இந்த விபரீதத்தைத் தடுத்து நிறுத்த? பார்வதி அம்மையும், கணபதியும், முருகனும் அருகில் இருந்தும் இதைத் தடுக்காதது ஏன்?

நாயனாரின் புலம்பல் நீடித்தது. "நான்

சேத்துப்பட்டு சித்தாந்த இரத்தினம் டாக்டர் எம்.ஆர்.சந்தானம்

மட்டும் அருகில் இருந்திருந்தால் கட்டாயம் இதைத் தடுத்திருப்பேனே.

இந்த கொடுமையை அறிந்து நான் என்ன செய்ய? இந்நேரம் ஆலகால விஷம் என் அண்ணலைத் தாக்கி இருக்கும் அல்லவா? அந்தத் துன்பத்தைக் கண்டு என்னால் எப்படி சகித்துக் கொள்ள முடியும்? நான் இனி உயிர் வாழ்ந்து தான் என்ன பயன்? இப்போதே கடலில் விழுந்து உயிர் துறப்பேன்" என்று கூறியவாறு ஓடினார் நாயனார்.

புற உலக உணர்வுகளே அற்று, அகநிலையில் பக்திப் பெருக்கிலே அல்லாடிக் கொண்டிருந்த நாயனாருக்கு கருணைக் கடலாம் சிவபெருமான் உடனே காட்சி அளித்தார். விடுவாரா நாயனார் இந்த அறிய வாய்ப்பை? பெருமானின் திருவடிகளில் விழுந்து அவரை அன்போடு கடிந்து கொண்டார்.

"அய்யனே, நீவிர் இப்படி செய்யலாமா? ஆலகால விஷம் பேராபத்தை விளைவிக்கும் அன்றோ? நீவிர் உண்ட விஷத்தை இப்போதே வெளியில் உமிழ்ந்து விடுங்கள். வரவிருக்கும் பேராபத்தைத் தடுத்து விடலாம்" என்று வேண்டி நின்றார்.

"அன்பனே, நீ அஞ்சுவது போல் இந்த நஞ்சு என்னை ஒன்றும் பாதித்து விடாது. என் கழுத்திலேயே தங்கி விட்டதால் விளையும் துன்பம் ஏதும் இல்லை. மாறாக, அவ்விஷத்தை வெளியே உமிழ்ந்து விட்டாலோ அது வானையும் மண்ணையும் அழித்து விடும். உயிரினங்கள் அனைத்தும் மாய்ந்து விடும்" என்று விளக்கினார் எம்பெருமான்.

விடுவாரோ நாயனார். "எம்பெருமானே விஷம் என்றைக்கும் விஷம் தானே, இன்று இல்லாவிட்டாலும் நாளை அது உள்ளே செல்லாது என்பது என்ன நிச்சயம்? தேவரீர் அதனை உமிழ்ந்தால்தான் அடியேனின் உள்ளம் சாந்தம் அடையும். அருள்புரியுங்கள் ஐயனே" என்றார் நாயனார்.

விடாக் கண்டனான பசுபதி நாயனாருக்குக் காலம் கனிந்து விட்டது போலும். "அன்பனே, அஞ்சாதே. உனக்கு நம்பிக்கை இல்லாவிட்டால் என் முன்னாள் அமர்ந்து, விஷம் உள்ளே போகாமல், பார்த்துக் கொண்டிருப்பாய்", என்று அருளினார் 'பக்தி வலையில் படுவோனா'கிய சிவபெருமான்.

அவ்வாறே, அன்று முதல் கயிலாயத்தில் பரமசிவன் பக்கத்தில் இருந்து கொண்டு அவருடைய 'நீல கண்டத்'தையே பார்த்தவாறு இருக்கிறார் பசுபதி நாயனார்.

பரம்பொருளின் மீது 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி' பக்தி செய்பவர்கள் மும்மல நீக்கம் கைவரப்பெற்று, புற உலகை முழுவதுமாக மறந்து, பேரொளிமிக்க தெய்வீகக் காட்சியில் திளைப்பார்கள். பெறர்க்கரிய இத்தகைய பாக்கியம் பெற்ற நாயன்மார்கள், ஆழ்வார்கள் மற்ற அருளாளர்கள் பலர் உண்டு.

கண்ணுதற் பெருமானால் "அம்மையே" என் அழைக்கப்பெற்ற காரைக்கால் அம்மையார் திருவாலங்காட்டில் நடனமாடும் இறைவனது தூக்கிய திருவடிக் கீழ் இன்றும்–என்றும் நீங்காது அமர்ந்து கூத்தனின் திரு நடனத்தை இரசித்துக் கொண்டிக்கிறார்.

சுந்தரர் பரவையாரிடம் தூதாக இறைவனையே அனுப்பியதால் சினம் கொண்ட ஏயர்கோன் கலிக்காம நாயனாரை சாந்தப்படுத்தியதே சிவபெருமான். நடந்து முடிந்த இராம கதையைக் கேட்ட மாத்திரத்தில் உணர்ச்சிப் பெருக்கால், இராமபிரானுக்கு உதவும் பொருட்டு சேனையைத் திரட்டிக் கொண்டு, செல்ல முயன்ற குலசேகர ஆழ்வாரும் நமக்கு ஒரு உதாரண புருஷன். கண்ணனையே தன் நாயகனாகக் கருதி பக்தி செய்த ஆண்டாள் பெற்ற அருளும் இத்தகையதே. அபிராமி பட்டரின் வாக்கை மெய்ப்பிக்க அமாவாசை இரவை பௌர்ணமி இரவாக மாற்றி அருளிய அம்பிகையின் அருளும் இத்தகைய பக்திக்குக் கிடைத்த பரிசே.

●

உலகம் உய்ய உதித்த உடையவர்

–சென்ற இதழ் தொடர்ச்சி.

திருவேங்கட முடையான் உடையவரின் கனவிலே வந்து, "திருவேங்கிட மலையில் சில பேர் பெருமாளின் மனம் வருந்தும் படியாக செயல்பட்டு வருகிறார்கள் என்றும் அவற்றை எல்லாம் நீர் போக்க வேண்டும்," என்று பேசியபொழுது, உடையவரும் கனவிலே பெருமாளிடம், "பதினான்கு உலகினையும் உண்டு உமிழ்ந்த பெருமானே உமக்கு தீமை செய்த நீசர்கள் யாவர் நான் அதற்கு என்ன செய்ய வேண்டும் சொல்வீராக" என்று கேட்கவும் பெருமாளும், உடையவரிடம் நீர் செய்ய வேண்டிய காரியத்தை நான் சொல்கிறேன். நீ கேட்பாயாக என்று சொல்லி, "(சென்ற பிறவியிலே செய்த பாவத்தால் முடவர்களாகவும், குருடர்களாகவும் பூமியிலே பிறந்து மானம் இல்லாதவர்களாகவும், பிள்ளைப்பேர் இல்லாதவர்களாகவும், இழிவான செயல் செய்யக்கூடியவர்களாகவும் இருந்து கொண்டு இல்லாத பொருளை எல்லாம் தருவாயாக என வேண்டிக் கொண்டு பின் என் மனம் நோகும்படி நடந்து

பெ. ராமநாதபிள்ளை, செயல் அலுவலர், திருமூர்த்திமலை உடுமலை வட்டம்.

கொள்கிறார்கள். எனவே, உம்மிடம் இருக்கிற சீடர்களில் ஒருவரை எந்தவிதமான வேண்டுதலையும் என்னிடம் வேண்டாதவனாக என் மீது உண்மையான அன்பு கொண்டவனை எனக்கு தொண்டு செய்ய அனுப்பி வைக்குமாறு கனவில் கேட்டுக் கொண்டதன் பயனாக, அனந்தாழ்வாரை தேர்வு செய்து திருமலையான் மனம் மகிழும் வகையில் அனந்தாழ்வாரை திருமலைக்கு அனுப்பி வைத்தார்.

அனந்தாழ்வார் தன் மனைவியோடு திருமலையிலே தங்கி பெருமாளுக்கு அழகிய பூந்தோட்டம் அமைத்து தொண்டு செய்து வந்தார். ஒரு சமயம் பூந்தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருக்கும்போது இவர் மண்வெட்டியால் மணல் மேடை அகற்றவும், அகற்றிய மணலை கூடையிலே அவர் மனைவி சுமந்து பூந்தோட்டத்தை அழகுபடுத்திக் கொண்டிருந்தார்கள். அவ்வாறு கூடையிலே மண் சுமக்கும்போது எட்டு மாத கர்ப்பிணியாக இருந்ததால் மணலை சுமக்க முடியாமல் சுமந்து சோர்ந்து நிற்கும் வேளையில் பத்து வயது சிறுவனாக பெருமாள் அவ்விடத்தில் தோன்றி அந்த அம்மையாருக்கு உதவி செய்ய வந்தார்.

"வருவாள் அந்த மயிலனையாள்
வயிற்றில்
கனத்தால் தலைச் சுமையால்
ஒருநாள் இளைத்துக் கூடையொடும்
ஓயும் பரிசை உறநோக்கித்
திருமா மகளார் தனிக்கேள்வன்
பீதாம்பரஞ்சேர் திருவரையில்
மருவாக் கட்டுக் கச்சையொடோர்
மனுவாய் வயதும் ஈரைந்தாய்".
-ஸ்ரீராமானுஜ வைபவம் 481.

அனந்தாழ்வார் கண்ணில் பட்டால் அந்த அம்மையாருக்கு உதவியாக அந்த மண்கூடையை நான் சுமப்பதை விரும்ப மாட்டார் என்று தெரிந்து கொண்டும், அதே நேரத்தில் அந்த அம்மையாருக்கு உதவ வேண்டும் என்ற எண்ணத்தில் செடி, கொடிகளில் மறைந்து நின்று கொண்டு அந்த அம்மையாரிடம் இருந்து கூடையை வாங்கிக் கொண்டு தான் அந்த மண்ணை சுமந்து கொண்டு மணலை கொட்டிவிட்டு வெறும் கூடையை அந்த அம்மையார் கையில் கொடுப்பார்.

அந்த அம்மையாரும் மீண்டும் அனந்தாழ்வார் வெட்டி வைத்த மணலை எடுக்க வரும்போது அவர் தன் மனைவியை நோக்கி கூடை மண்ணை போட்டு விட்டு திருப்பி வரக்கூடிய இடம் வெகு தொலைவில் இருக்கிறதே இவ்வளவு சீக்கிரத்தில் எப்படி வந்தாய் பக்கத்தில் எங்கேயாவது கொட்டி விட்டாயோ என்று கேட்கவும், அந்த அம்மையார் பத்து வயது மதிக்கத்தக்க சிறுவன் ஒருவன் தான் சோர்ந்து நிற்பதை பார்த்து எனக்கு உதவியாக மணல் கூடையை என்னிடம் இருந்து வாங்கி அவன் மண்ணை சுமந்து கொட்ட வேண்டிய இடத்தில் கொட்டி விட்டு என்னிடத்தில் விரைந்து வந்து கூடையைத் தந்தார் என்று கூறவும்.

அனந்தாழ்வார் வந்தது இறைவனாக இருக்குமோ என எண்ணி நாம் செய்ய வேண்டிய பணியினை பங்கு போட்டுக் கொண்ட சிறுவனை காட்டுவாயாக என தன் மனைவியிடம் கூறவும் அவர் மனைவியும் அனந்தாழ்வாரை அழைத்துக் கொண்டு பத்து வயது சிறுவனாக நின்ற பெருமாளை காட்டி "இவன் தான்" என்றாள்.

"தேசார் கருணைத் திருவுருவைத்
திருந்த நோக்கிஅனந்தாழ்வான்
ஆசாரியனன்(று) எனக்குவந்தே
அருளும் பணியைச் செய்திருவின்
நேசா பறிக்க வந்தனைகொல் நில்நில்
என்ன மாறுகொடு
கூசா தடிப்ப விரைந்தோடிச்
சென்றான் கருத்தைக் குறித்திறைவன்".
ஸ்ரீராமானுஜ வைபம் பாடல் 488.

உடையவராகிய தன் குருநாதர் எனக்கிட்ட

பணியை நான் செய்ய இருக்கும் பொழுது நீ அதை பறிக்க வருகிறாயோ என்று அந்த பையனை அடிக்க செல்லவும், அந்த சிறுவன் ஓடவும் அவர் பின்னர் தொடரவும், நாம் இவர் கைக்கு மாட்டினால் நம்மை கொன்றேவிடுவார் என்று எண்ணி அச்சிறுவன் ஒரு மரத்தின் பின்னால் ஒழிந்து கொண்டார்.

அனந்தாழ்வார் அம்மரத்தின் அருகில் வந்து, வந்தது பெருமாள் தான் என்று உணர்ந்து கொண்டு இறைவனே இனிமேல் இவ்வாறு செய்ய வேண்டாம் என்று வேண்டிக் கொண்டு மேற்படி மண் வெட்டும் பணியினை செய்து வந்தார். அனந்தாழ்வாரது மனப்பக்குவத்தை உணர்ந்த பெருமாள் இவன் ஒரு பொழுதும் நம்மிடம் ஒரு பொருளும் கேட்காத ஞானத்தை உடையவனாய் இருக்கிறான், எட்டு எழுத்து மந்திரத்தில் சொல்லியபடியே வாழ்ந்து வருகிறான். எனவே, இவனுடைய பெருமையை உலகிற்கு வெளிப்படுத்த வேண்டும் என்று திருவுளம் பற்றினார்.

"வருநாளில் மண்முழுவும் வானகமும்
காத்தருளும்
திருநாதன் அனந்தாழ்வான்
திறம்நோக்கி
இவன்நம்மை
ஒருநாளும் ஓர் பொருளும் வேண்டாத
உணர்வினாய்
இருநான்கு திருவெழுத்தின்
படிவாழ்ந்திங்(கு) இருக்கின்றான்".

ஸ்ரீராமனுஜ வைபம் பாடல்–491.

அனந்தாழ்வானின் பெருமையினை உலகிற்கு வெளிப்படுத்த விரும்பிய பெருமாள் அனந்தாழ்வான் மேல் பெரிய வியாதியை (தொழுநோய்) ஏவினார்.

பெரிய வியாதி வந்து பற்றிக் கொண்டு அனந்தாழ்வானின் உடம்பு அருவருக்கத்தக்க வகையில் உடம்பு அழிந்து எலும்பு தெரியும் வகையில் விகாரமான தோற்றத்தில் காணப்பட்டாலும் அனந்தாழ்வான் கொஞ்சமும் மனம் தளரவில்லை.

இவ்வாறு வியாதியால் வருந்தி வரும் அனந்தாழ்வானிடம் திருவேங்கடமுடையான் வந்து தோன்றி, "உத்தமரே, உயர்ஞானத்தை உடையவரே நான் உமக்கு வந்த இந்தநோயை முழுமையாக தீர்த்துவைக்கட்டுமா, உடம்பில் ஒரு தழும்பு கூட இல்லாமல் செய்யட்டுமா என கேட்கவும்.

இவ்வாறு தன்னிடம் கேட்ட ஸ்ரீநிவாச பெருமாளை பார்த்து, "மூன்று உலகங்களையும் உண்டு உமிழ்ந்த உத்தமனே நீதான் எனக்கு இந்நோயை தந்தாய், அடியேனுக்கு இதைக்காட்டிலும், வேறு நீ செய்யும் உதவி உள்ளதோ'?" என வினவி, எனவே நீர் புறப்பட்டு செல்வீராக என அனந்தாழ்வான் கூறவும், பெருமாள் திரும்பி செல்ல முற்படவும், அலர்மேல்மங்கை தாயார் அனந்தாழ்வார் மீது பெருமாள் கருணைபொழிய வேண்டும், மேலும் சோதிக்க வேண்டாம் என பிரார்த்திக்க, பெருமாள் அனந்தாழ்வானின் நோயை முற்றிலும் குணமாக்கி உடம்பில் ஒரு தழும்புகூட இல்லாமல் செய்தார். இதனை கண்ட உத்தமர்கள் மனம் மகிழ்ந்தனர்.

"ஆங்கவன் விடுத்த அரும்பிணி உடனே
அகன்றதன்(று)அனந்தன்
மெய்த்திறத்தின்
ஓங்குசீர் நிலைகண்டுலகமுண்டவனும்
உம்பரும்மனங்களி கூர்ந்தார்
தாங்கிய உடம்பில் தழும்புமில்
லாமைகண்ட
உத்தமர்களும் மகிழ்ந்தார்.
பாங்குறு குரவன் பணித்தன
தொழிலைப்
பத்தனம் பண்டுபோல பயின்றான்".

ஸ்ரீராமானுஜ வைபம் பாடல் 496

(தொடரும்)

பாம்பன் சுவாமிகள்

திருமுறை தந்த நால்வர் வழியில், திருப்புகழ் அருணகிரிநாதர் திருநெறியை உலகுக்கு உணர்த்த வந்தவர் அபராருணகிரி என அன்பர்களால் போற்றப் பெறும் பாம்பன் சுவாமிகள் ஆவார்.

கி.பி.1848ம் ஆண்டில் ஒரு வெள்ளிக் கிழமையில் இராமேஸ்வரத்திலே அவதரித்த மகான் இவர். இவர் தந்தையார் சாத்தப் பிள்ளை தாயார் செங்கமலத்தாயார். பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் 'அப்பாவு' என்பதாகும்.

திரு.முனியாண்டியா பிள்ளை என்பவரிடம் தமிழ்ப் பயின்றார் அப்பாவு. பின்னர் கிறிஸ்துவ கலாசாலையில் கல்வி பயின்றார். தமிழில் அதிக மதிப்பெண் பெற்றதால் தேவ சகாயம் என்ற ஆசிரியரால் பாராட்டப்பட்டு பரிசும் பெற்றார். பள்ளி பருவத்திலேயே தேவசகாயம் கிடைத்தது இவருக்கு.

சிறுவனின் 'சிவ சிவ' ஜெபம்

நாகநாதர் கோவில் பிரம்மோற்சவத்தை பார்ப்பதற்காக 'அப்பாவு' தனது நண்பர்களுடன் புறப்பட்டார்.

சிறுவர்களும் இரண்டு சந்நியாசிகளும் ஒரு தோணியில் ஏறி நாகநாதர் கோயிலுக்குச் சென்றனர். கடலில் தோணி செல்கிறபோது, இரு சந்நியாசிகளும் 'சிவ சிவ' என்று ஜெபிக்கத் தொடங்கினர். சிறுவன் அப்பாவு இதை உற்று நோக்கி தாமும் உள்ளுக்குள் 'சிவ சிவ' என்று ஜெபிக்கத் தொடங்கினான்.

இந்த சிவ சிவ ஜெபம் தரிசனத்திற்கு பிறகு இல்லம் வந்ததும் தொடர்ந்தது. மூன்று நாட்களுக்குப் பிறகு முருகனைப் பற்றிய நூலொன்றை நாம் பயில வேண்டும் என்ற எண்ணம் 'அப்பாவு'வின் மனதில் தோன்றியது. புத்தக கடையில் முக்காலணா கொடுத்து 'சஷ்டி கவசம்' என்ற நூலினை வாங்கிப் படித்தார். நாள்தோறும், 'சஷ்டி கவசம்' தந்த தேவராய சுவாமிகள் கூறியபடி 36 முறை அறுபடை வீடு கவசத்தையும் பாராயணம் செய்தார்.

சுவாமிகள் கற்ற கலைகள்:

கிறித்துவ கலாசாலையில் பயின்ற பிறகு தம் வயதுடைய இளைஞர்களுடன் சேர்ந்து சிலம்பம், மற்பிடி, நீர்நீத்து போன்றவற்றை கற்றார். சித்திரம் எழுதுதல், மலர் தொடுத்தல், தையல் செய்தல் போன்றவற்றையும் கற்றார்.



நல்ல ஆரோக்கியத்துடன் திடமான தேகமுடையவராக திகழ்ந்தார். மலர்ந்த முகமுடையவராக காட்சி தந்தார்.

முதற்பாடல் இயற்றல்:

ஒரு வெள்ளிக் கிழமை, அதிகாலையிலே தனது தென்னந்தோப்புகளை பார்வையிடச் சென்ற சுவாமிகள் தன் தந்தையார் தோப்பினுள் இருப்பதை அறிந்து தென்னந்தோப்பின் உள் செல்லாமல் நின்று விட்டார். அப்போது தேவராய சுவாமிகள் போல் யானும் பாடக் கடவேன் என்று முடிவு தோன்ற வடக்கு முகமாய் நின்று செவ்வேளைச் சந்தித்து வந்தித்து பனையோலையில் வெள்ளிபூக்கள் இடப்பட்ட தந்த எழுத்தாணியை எடுத்து கிழக்கு முகமாக நோக்கினார். என் ஆண்டவனாகிய குமாரபர மேஸ்வரனே! நின்னையே பல பாக்களாலும் பாடக் கடவேன். அருணாகிரிநாதர் பெயர் வைத்து ஒவ்வொரு பிரபந்தமும் முடிக்கக் கடவேன்; அவர் வாக்குப் போல எனக்கும் வாக்குண்டாக அருள்வாயாக' என்று கைகூப்பிட்டு நின்றார்.

அப்போது சுவாமிகள் அறியாமலேயே 'கங்கையைச் சடையிற் பரிந்து' என்ற விசேட மங்கல மொழித் தொடர் வாக்கில் உண்டானது.

இத்தொடரைக் கொண்டு முதல்பாடலைப் பாடினார்.

மறுநாள் இனி தினமும் உண்பதற்கு முன் ஒவ்வொரு பாடல் பாடக் கடவேன் என்று உறுதி பூண்டார். இவ்வாறு நூறு தினங்களில் நூறு பாடல்கள் பாடி முடித்தார்.

சடக்கர உபதேசம் பெறல்

சுவாமிகள் நெல் வியாபாரம் செய்து வந்தார். அப்படி செய்யும்போது விற்பனைப் பணப் பெட்டியின் மேலே சுவாமிகள் எழுதிய 100 பாடல்களும் வைக்கப்பட்டிருந்தன.

இராமேசுவரத்தில் வடமொழிப் புலமையும், தென்மொழிப் புலமையும் ஒருங்கே வாய்க்கப் பெற்ற சேதுமாதவ ஐயர் என்பவர் சிறந்த சுப்ரமண்ய பக்தராவார். இவர் ஒருமுறை நமது சுவாமிகள் வியாபாரத்தலம் வழியே வந்தபோது இன்னார் மருமகனா நீ?" என்றார்.

சுவாமிகளும் ஆம் என்றார். பின்னர் நெல் வியாபாரம் பற்றியெல்லாம் விசாரித்து அறிந்தார். பணப் பெட்டியின் மேல் வைக்கப்பட்டிருந்த 100 பாடல்களையும் கண்டார். பின்னர் அப்பாடல்களை புதுக்கோட்டை வித்வான் குமாரசுவாமிப் பிள்ளை என்பாரிடம் கொடுத்தார். சேது மாதவ ஐயர் வித்வான் அவர்கள் பாடல்களில் உள்ள கருத்துக்களைக் கண்டு வியந்து முதற்பாடலிலேயே துறவறம் பற்றி குறித்துள்ளமையை வியந்து சாற்றுக்கவி ஒன்று தந்தார். சேதுமாதவ ஐயரும் 'அப்பாவு'வைப் பாராட்டி சாத்துகவி ஒன்று ஈந்தார். சில நாட்கள் கழிந்தன. அப்பாவுவைச் சந்தித்த சேதுமாதவ ஐயர், நாளை விஜயதசமி இன்று மாலை எனது வீட்டிற்கு வந்து விடு என்று கூறிச் சென்றார். மாலை, அப்பாவு சேதுமாதவரின் இல்லத்திற்குச் சென்றார். இங்கேயே உறங்கு! நாளை விடியற்காலை வருவேன் என்று கூறினார் சேதுமாதவர். சொன்ன வண்ணம் மறுநாள் காலை அப்பாவுவை எழுப்பி அக்கினி தீர்த்தமாகிய சமுத்திர தீர்த்தத்தில் மும்முறை மூழ்க வைத்தார். பின்னர் அப்பாவு திருநீறணிந்து சேதுமாதவர் முன் நிற்க, அவரும் முறைப்படி சடக்கட மந்திர உபதேசம் செய்தார்.

முனியை முருகெனப் பாடியது

இவரது தமிழாசிரியர் முனியாண்டிப் பிள்ளை, அப்பாவு நான் வணங்கும் குன்றுகளில் வாழும் முனிஸ்வரனைப் பாடுக! என்று கேட்டுக் கொண்டார். சுவாமிகளோ சண்முகனைப் பாடுவதே என் விரதம் என்றார். முனியாண்டியாப் பிள்ளை முனியை முருகெனப் பாடுக! என்றார். சுவாமிகளும் ஆசிரியர் வேண்டுகோளை ஏற்று பாடினார். முனிசுவரனை வணங்குவோர் இப்பாடல்களைப் பாடி பலன் அடைந்து வருகின்றனர்.

குடும்பம்:

நமது சுவாமிகளுக்கு திருமணம் ஆனது. அம்மையார் பெயர் காளிமுத்தம்மாள். இவர் மதுரை சின்னக்கண்ணு பிள்ளை புத்திரியாவார். முருகையப் பிள்ளை, சிவஞானம்பாள், குமரகுருதாசப் பிள்ளை ஆகியோர் சுவாமிகட்கு பிறந்த குழந்தைகள்.

பாதக்குறடு தந்த பரமன்:

சுவாமிகள் வாழ்க்கையில் பன்னிருகை பரமன் பல திருவிளையாடல்களைச் செய்துள்ளான். ஒருமுறை கோடை காலத்தில் சுவாமிகள் தென்னந்தோப்பில் நடந்து சென்று கொண்டிருந்தபோது, 'முள்' ஒன்று சுவாமிகள் பாதத்தில் ஏறியது. சுவாமிகள் அம்முள்ளை விலக்கியபோது, ரத்தம் பீறிட்டதும் கோடையின் வேதனையும், முள் தைத்த வலியும் சுவாமிகளுக்கு வருத்தத்தை அளித்தன. முருகப் பெருமான் தச்சுவேலை செய்யும் ஒருவரிடம் எனது அன்பனுக்கு பாதக்குறடு செய்து கொடு என்று கட்டளையிட்டார். அவ்வாறே சுவாமிகளும் பாதக்குறடுகள் பெற்றார். இந்நிகழ்ச்சியை சுவாமிகள் விளக்குவதைப் பாருங்கள்.

"கொடிய கோடையிற் சுடும ணற்களோ
குருதி பாயவெ னடியி லேறுமுள்
வடிக ணீரிலே நனைத லுள்கியம்
மழவ னுக்கணி குறட ளித்தியென்
றடியை நாடுமோர் தபதி பாற்புகன்
றருளொர் தண்ணனி யிறைவ
வென்னையும்
மிடிய னாகவே விடுவை யோவயின்
மிளிர்கை யானியே விபுதர் மீளியே
சண்முக கவசமும்
பஞ்சாமிர்த வண்ணமும்

இளமையில் சஷ்டி கவசத்தை ஓதியுணர்ந்த சுவாமிகளை தேவராய சுவாமிகள் கூறியவாறு சஷ்டி கவசத்தை பாராயணம் செய்திட குறைந்தபட்சம் 10 மணி நேரம் தேவைப்படுவதை உணர்ந்தார். எல்லோரும் எளிதில் பாராயணம் செய்திட சஷ்டி கவசத்தை நிகர்த்த 'சண்முக கவசத்தை' நமக்கு அளித்தார். சண்முக கவசம் பாராயணம் செய்து பலன் அடைந்தோர் பலர்.

திருவனந்தபுரம் ந.சுப்பிரமணிய பிள்ளை என்பாரின் வேண்டுகோளை ஏற்று பரிபூஜன பஞ்சாமிர்த வண்ணப் பாடல்களை அருளினார். சர்க்கரை, பால், தயிர், நெய், தேன் என்று ஐந்து வகை அபிடேகம் செய்யும்போது பாராயணம்

செய்ய வேண்டிய அற்புதப் பாடல்களை நமக்கு அளித்துள்ளார் பாம்பன் சுவாமிகள். இப்பாடல்களை பாராயணம் செய்வோர் முருகப் பெருமான் அருள் பெறுவர் என்பது உறுதி. இதை முருகனே நேரில் தோன்றி திருச்செந்தூரில் வெளிப்படுத்திய மாட்சியை என்னவென்பது?

சுவாமிகளுக்கு பிற பெயர்கள்:

பாம்பன் பதி வாழ்ந்த சேஷகிரியார் சுவாமிகளின் பஞ்சாமிர்த வண்ணப் பாடல்களை கண்டு அழைத்த பெயர் குமரகுருதாசர்.

திருமலைராயன் பட்டினத்தில் உள்ள ஒரு தேவதை வழங்கிய பெயர் 'குமாரசுவாமி'. பாம்பனில் பல காலம் வாழ்ந்தமையால் பாம்பன் சுவாமிகள் என்றும், சிலர் தாத்தா என்றும் சிலர் குருமகா சக்ரவர்த்தி என்றும், பலர் அபராருணகிரி என்றும் சைவ சித்தாந்த ஞானபானு என்றும் வழங்கி வருகிறார்கள்.

சுவாமிகள் தவம்:

கி.பி. 1894ம் ஆண்டு சுவாமிகள் பிரப்பன் வலசை மயான வெளியில் ஒரு கொட்டகை நிறுவி சதுரக்குழி ஒன்று அமைத்து அதில் தவமிருக்கத் தொடங்கினார். ஐந்து நாட்கள் பல இன்னல்கள் ஏற்பட்டாலும் தவத்தின் மேன்மையால் ஆறாம் நாள் குமார பரமேஸ்வரனுடன், அருணகிரிநாதர், அகத்தியர் திருக்காட்சியும் கண்டார். பின்னும் தவமிருந்து 35வது நாள் சித்ரா பௌர்ணமியன்று தவ நிறைவு செய்தார் சுவாமிகள்.

மயூர வாகன சேவன விழா:

1923ல் டிசம்பர் 27ம் தேதி தம்பு செட்டி வீதியில் ஒரு குதிரை வண்டியின் சக்கரம் சுவாமிகள் இடது கணுக்காலில் ஏறி காலை முறித்து விட்டது. அன்பர்கள் கவலையுற்றனர். சென்னை பொது மருத்துவமனை மருத்துவர்கள் முறிந்த எலும்பு கூட வாய்ப்பில்லை என்றனர். சுப்ரமணியதாசர் எனும் சின்னச்சாமி ஜோசியர் போன்ற தீவிர பக்தர்கள் இடைவிடாது சண்முக கவசம் பாரர்யணம் செய்ததால் அதிசயம் ஒன்று நடந்தது. ஆம்! சுப்ரமண்ய தாசருக்கு சுவாமிகளின் காலில் இரண்டு திருவேல்களின் இலையலகு அடிப்படையிலே பொருத்தப் பூட்டப்பட்டும் மற்றொரு திருவேல் முனை தாங்கி நிற்றலும் ஆகிய காட்சி தோன்றியது.

பாம்பன் சுவாமிகள் 11ம் நாளிரவு முருகனின் வாகனமாகிய மயில்கள் இரண்டு மேற்றிசையில் இருந்து நடமானடி வர சுவாமிகள் தரிசித்து கைகூப்பி வணங்கினார். இவ்வருட்காட்சியையே சுவாமிகள் மயூரவாகன சேவன விழாவாக கொண்டாடப்படுகிறது.

வழக்குகள்:

குடும்பத்திலிருந்தபோதும், துறவறம் ஏற்ற பிறகும் சுவாமிகள் பல வழக்குகளைச் சந்தித்தார். அனைத்திலும் வெற்றி வாகை சூடினார். தமது பாடல்களை 6666 என்று வகைப்படுத்தி 6 மண்டலங்களாகப் பிரித்தார். தமது பக்தர்களை மஹாதேஜோ மண்டலம் என்ற அமைப்பை சார்ந்தவர்கள் என நெறிப்படுத்தினார்.

30.05.1929 அன்று சுவாமிகள் யாவரும் அறிய சுவாசத்தை உள்ளுக்கு இழுத்தார். அது வெளிவராமல் அங்கே அடங்குவதாயிற்று. சுக்கில வருடம், வைகாசி மாதம் அமரபட்சத்து சஷ்டி திதி, அவிட்ட நட்சத்திரம் இது நிகழ்ந்தது.

பின்னர் சுவாமிகள் விரும்பிய வண்ணம் *31.5.1929* வெள்ளிக்கிழமை காலை *8.15* மணிக்கு திருவான்மியூரில் சமாதி நிலை கொண்டார்.

உலகம் செழிக்க வந்த உத்தகுருநாதரின் 80வது குருபூஜை இந்த வருடம் 13.6.2009 சிறப்புற அனைத்து பக்தர்களும் கொண்டாடிட வேண்டும். இறையாம் குமரா பரமேஸ்வரனையும், குமரகுருதாசராம் பாம்பன் சுவாமிகளையும் போற்றி கொண்டாடுவோம்.

பாம்பன் சுவாமிகள் மக்கள் உடல் நலத்துடனும், உள நலத்துடனும் வாழ்ந்திட 'சண்முக கவசமும்' அகப்பகை, புறப்பகை வென்றிட 'பகை கடிதலும்' நோய் நீங்கிட 'குமாரஸ்தவமும்' நற்புத்திரப் பேறு பெற்றிட வேற்குழவி வேட்கையும் அளித்துள்ளார். இஃதன்றி மக்கள் இறைவனை பூஜித்து மகிழ்ந்திட 'தௌத்தியமும்' அபிஷேகத்து பலன் பெற்றிட பரிபூஜன பஞ்சாமிர்த வண்ணமும் அருளியுள்ளார். சுவாமிகள் இயற்றிய ஆறு மண்டலங்களையும் படிப்பவர் மெய்ப் பொருளை உணரலாம். சிவகதி அடையலாம்; பேத அபேத நிலை கடந்து இறையை உணர்வர்.

வீ. கலைச்செல்வன் சிறப்பாசிரியர், பாம்பன்சுவாமிகள்

தித்திக்கும் திருப்புகழ் பிறந்த வயலூர்

எத்திக்கும் புகழ் மணக்கும் தித்திக்கும் திருப்புகழை அருணகிரிநாத சுவாமிகள் முருகன் அருள் பெற்று பாடத் தொடங்கிய திருத்தலம் வயலூர். குமரனின் கொலு மண்டபம் என்பதால் குமார வயலூர் என்று அழைக்கப்படுகிறது திருப்புகழில் வயலி என இத்தலம் குறிக்கப்பட்டுள்ளது. அருணகிரி நாதர் முருகனை வயலூரான் என்றே அழைக்கிறார்.

முருகனின் அருட்படைவீடென்றும் ஏழாம் படைவீடென்றும் கொண்டாடப்படும் வயலூர், திருச்சியிலிருந்து 12 கி.மீ தொலைவில் உள்ளது. திருச்சி சத்திரம் பேருந்து நிலையத்திலிருந்து, நகரப்பேருந்து வசதி உள்ளது.

வயலூர் ஆலயம் அடிப்படையில் சிவாலயமேயாகும். இங்கு கொலுவீற்றிருக்கும் முருகன் தனிச்சிறப்பு பெற்று விளங்குவதால் சிறந்த முருகத்தலமாகப் போற்றப்படுகிறது.

ஆதியில் பயிர்களை அழிக்கும் விலங்குகளை வேட்டையாட வந்த சோழ மன்னன் ஒருவன் இங்கே வந்தபோது தாகத்தால் தவித்தான். பருக அருகில் தண்ணீர் கிடைக்கவில்லை. தண்ணீரைத் தேடிக்கொண்டே வந்தபோது ஒரு இடத்தில் மூன்று கிளைகளுடன் கூடியதாக கரும்பு செழித்து வளர்ந்திருப்பதைக் கண்டான். அதைத்தின்ன ஒடித்தான். ஒடித்த இடத்திலிருந்து குருதி வழிந்தது. அவன் அதிசயமடைந்தான். காவலரையும்



ஏவலரையும் அழைத்து அந்த இடத்தை ஆராயும்படி செய்தான்.

அவர்கள் அங்கே ஒரு சிவலிங்கத்தைக் கண்டு மன்னனிடம் தெரிவித்தனர் மன்னன் அகமகிழ்ந்து அங்கே அவருக்கு ஆலயம் அமைத்தான். இதுவே வயலூர் ஆலயத்தின் தோற்றம் பற்றிய செவி வழிச்செய்தி வரலாறு ஆகும்.

இங்கு வீற்றிருக்கும் பெருமான் "கரும்படியில் முளைத்த கனல்" என்பதால் ஆதியில் அக்னீசுவரர் என்று அழைக்கப்பட்டார். பின்னாளில் ஆதிநாதர் என்ற பெயர் வழங்கத் தலைப்பட்டது. அம்பிகை முன்னிலை நாயகி என்று அழைக்கப்படுகிறாள்.

இனி ஆலயத்துள் சென்று வழிபடலாம். முதலில் ஆதிமூர்த்திகளாக விளங்கும் திருமுன்னிலை நாயகியையும், ஆதிநாதரையும் வழிபடலாம்...

அருள்மிகு பொய்யாக் கணபதி

ஆதிநாதரையும், ஆதிநாயகி அம்மையையும் வழிபாடு செய்தபின் தெற்குப் பிரகாரத்தின் வழியாக வந்தால் பொய்யாக் கணபதியைக் காண்கிறோம். அருணகிரி சுவாமிக்கு அருள் தந்து திருப்புகழ் பாடும் திறம் தந்தவர் பொய்யாக் கணபதி என்பர். பொய்யான வாழ்வை நம்பி, பூமியில் திரிபவர்களை மெய்ஞான பாதைக்குத் திருப்பி அருள் செய்பவர் பொய்யாக் கணபதி. திருப்புகழ் பாடல் ஒவ்வொன்றிலும் பொய்யான வாழ்வு முதற்பகுதியும், மெய்ஞான வாழ்வு பிற்பகுதியுமாக அருணகிரிநாதர் அமைத்துப் பாடியது பொய்யாக் கணபதிக்கு தான் காட்டிய நன்றி கலந்த அஞ்சலி என்றே கருத வேண்டும்.

பொய்யாக் கணபதி சந்நிதிக்கு அருகே அருணகிரி சுவாமிகளுக்கு வயலூரில் பீடம் அமைத்திருக்கிறார்கள். அதைக்காணும் போது திருப்புகழ் படிப்பவர்கள் சிந்தை மகிழ்வார்கள்.

அருணகிரிநாதர் சந்நிதியில் நின்று நோக்கும்போது இடதுபுறம் பொய்யாக் கணபதியின் சந்நிதியும் எதிர்ப்பக்கத்தில் கல்லால மரத்தடியில் வீற்றிருக்கும் தெட்சிணாமூர்த்தியையும்,

வணங்கி அடுத்தாக மேலே சென்றால் முத்துக்குமார சுவாமி சந்நிதியைக் காண்கிறோம். இதில் முத்துக்குமாரன் மயில் மேல் அமர்ந்த தோற்றத்தோடு ஆனந்த சொரூபராகக் காட்சி தருகிறார். அம்மன் சந்நிதிக்கு அருகிலுள்ள தூணில் முத்துக்குமாரசுவாமி உருவம் இருக்கிறது. இதற்கு தினசரி பூஜை நடைபெறுகிறது. ராஜகம்பீர நாடாளும் நாயகனாக வயலூரில் விளங்குபவர் இந்த முத்துக்குமார சுவாமிதான்.

அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி

அருள்மிகு முத்துக்குமார சுவாமி சந்நிதிக்கு அடுத்திருப்பது அருள்மிகு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமியின் திருமுன்றிலாகும். பக்தர்களைத் தன்பால் ஈர்க்கும் தோற்றம். வரம் தரத்

துடிக்கும் அதரம். சுடர்வேல் தாங்கிய கரம், தெய்வக் குஞ்சரி வள்ளியோடு எக்காலத்தும் நிறைந்து விளங்கும் பரம்பொருள் இந்த கர்ப்பகிரகத்தினுள் இயைந்து நிற்கும் காட்சி மனதை விட்டு அகலாது.

சித்தர்கள் தேடி வந்து முக்தியைப் பெற விழையும் திருக்கோயிலாக வயலூர் முருகன் சந்நிதி விளங்குகிறது.

சந்நிதியில் நின்று கண்கொண்ட மட்டும் காணலாம். அய்யன் திருவடியை ஆழ்ந்து அனுபவிக்கலாம். தன் அடியார்கள் அனைவரும் தன்னை நெருங்கி வந்து வழிபடவும், தன் அடியார்களை நெருக்கத்தில் வைத்து அருள் வழங்கவும் தான் தந்தையின் பின்னால் நெருக்கமான இடத்தில் வயலூர் முருகன் வேண்டுமென்றே அமர்ந்தாரோ என்று கருத இடமுண்டு.

அருணகிரிநாதர் பல நாட்கள் இங்கே தங்கி முருகப் பெருமான் சந்நிதியில் நின்று கனிந்து, கனிந்து பாடிப் பரவசம் அடைந்து திருப்புகழ் என்னும் செந்தமிழ் தேவ அமிர்தத்தை உலகிற்குத் தந்தருளினார். சந்தத்தமிழ் வளர்ந்தது.

திருப்புகழ் உள்ளவரை, அருணகிரிநாதர் புகழும், வயலூர் புகழும் நின்று நிலைக்கும். என்பதில் ஐயமில்லை.

முருகன் வடிவங்களில் வலதுபுறம் இருக்கும் தேவ குஞ்சரியை நோக்கியவாறு நிற்கும் மயில் முகத்தை வைத்துக் கொண்டிருக்கும் தலங்கள் குறைவே. வயலூர் பகுதியில் தெய்வகுஞ்சரியின் பக்கம் மயில் முகம் வைத்திருக்கிறது. முக்திப் பேறு விரும்பும் அடியார் போற்றி வணங்க வேண்டிய உருவம் வயலூர் வடிவேலன் திருவடியாகும். அதனால் முத்தியை விரும்புபவர்கள் இப்பெருமானை தேடிவந்து வணங்குகின்றனர்.

வயலூரில் ஒரு உண்மையை நமக்கு உணர்த்துகின்றார் முருகப் பெருமான். தந்தையையும், தாயையும் முன்னிறுத்தி, "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்பதை நமக்குப் புகட்ட, அன்றாடம் தாய், தந்தையர் தாள் பணிந்து பூசனை புரிந்து அருள் பெற்ற பாலகராகக் காட்சி தருகிறார் வயலூர் முருகப் பெருமான்.

தன் வேலால் சக்தி தீர்த்தம் அமைத்துத் தாய், தந்தையரைத் தேவரும், மூவரும் காண ஆத்ம பூஜை செய்து அகில உலகிற்கும் அருள் தந்து காக்கும் கற்பகமாக, காமதேனுவாக வரம் பெறுகிறான் வயலூர் முருகப் பெருமான். மற்ற இடங்களில் தனித்து நின்று பூஜை செய்யும் முருகப் பெருமான் வயலூரில் தெய்வ குஞ்சரி வள்ளியோடு சேர்ந்து பூசனை செய்கின்ற தனிச் சிறப்பு பெற்றுத் திகழ்கின்றார். திருமணம் ஆனவர் சகபத்தினியோடுதான் கர்மாக்கள் செய்ய வேண்டும் என்ற விதிமுறை தவறாது ஏழாவது படைவீடாக வயலூர் அமைத்து அம்மை - அப்பர் சக குடும்ப தர்ம பத்தினிகள் உடனான முருகப் பெருமான் பூஜை செய்கிறார் என்பதே வயலூர் பதியின் தனிச்சிறப்பாகும்.

வயலூர் வள்ளலை அடிவணங்கியதும் மறக்காமல் வடபுற மூலையில் அமர்ந்திருக்கும் மகாலட்சுமியை வணங்கி அவளது கடைக்கண் பார்வை பெற வேண்டும். முருகனை வணங்கி வருகின்றவர்களுக்கு மகராசி லட்சுமி வாரி வழங்குகின்றாள்.

வயலூர் திருக்கோயிலின் கிழக்குப் பக்கத்தில் சக்தி தீர்த்தக் கரையில் கல்லால மரத்தடியில் வேல் வடிவான தோற்றத்தை இடும்பன் கோயில் என்றும், கிராம தேவதை கோயில் என்றும் சொல்கின்றனர். கல்லால மரத்தடியில் ஞான சொரூபராக வீற்றிருக்கும் தென்முகக் கடவுளும், கல்லால மரத்தடியில் ஞானவேல் வடிவமாகத் திகழும் தேரடியான் கோயிலும் சிந்திப்பவர் சிந்தனைக்கு விருந்தாக அமையும்.

வயலூர் திருக்கோயிலின் தல விருட்சம் வன்னி மரம். இது ஏறக்குறைய இருநூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமையான மரம்.

கல்வெட்டுச் செய்திகள்

இக்கோயிலில் உள்ள கல்வெட்டுக்கள் அரசாங்கத்தால் நகல் எடுக்கப்பட்டு 1936–ம் ஆண்டில் 138 எண் முதல் 157 வரை பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

திருப்பணிச் செய்திகள்

வாரியார் சுவாமிகளும், திருக்குட முழுக்கும்

அருளாளர் வாரியார் சுவாமிகள் எங்கும் நிறைந்த முருகப் பெருமான் வயலூர் தலத்தில் தமக்கு அருள் புரிந்தான் என்று தமிழ் கூறும் நல்லுலகு முழுவதும் சென்று நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக முழங்கி வந்ததை எல்லாரும் அறிவர். வயலூரைப் பற்றி தமிழ் மக்கள் அறியும்படி செய்தவர்

வாரியார். நான் அன்றாடம் வழிபட்டு வரும் முருகப் பெருமான் திருவடிகளை வணங்கி சொற்பொழிவைத் தொடங்குகிறேன் என்று முன்னுரை மொழிந்தே வாரியார் சுவாமிகள் சொற்பொழிவை தொடங்குவார்கள்.

அருணகிரிநாத சுவாமி என்று வாயார வாரியார் சுவாமி, திருப்புகழ் தந்த செல்வரைப் போற்றுவார். அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் பாடல்களை ஒன்று திரட்ட வாரியார் சுவாமி எடுத்தக் கொண்ட முயற்சிகள் பற்பல. அருணாகிரியாரின் அமுதத் தமிழுக்குப் பதவுரை, தெளிவுரை, கருத்துரை ஆகியவற்றை திருப்புகழ் அமிர்தம் என்னும் பத்திரிகையில் வாரியார் சுவாமிகள்

சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர்	பு.ரா. சம்பத் இ.ஆ.ப., ஆணையர் தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத் துறை, சென்னை – 600 034. தொலைபேசி எண்: 28334811/12/13
ஆசிரியர்(கூ.பொ)	ம. தேவேந்திரன், பி.எஸ்ஸி., பி.எல்., துணை ஆணையர்
அச்சிடுவோர்	குணசுந்தரி மாடர்ன் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை – 21 தொலைபேசி : 25967929

வெளியிட்டு வந்துள்ளார்கள். அருணகிரி சுவாமியையும் வயலூர் முருகனையும் நமக்கெல்லாம் ஆற்றுப்படுத்தியவர் வாரியார் சுவாமிகள்தான்.

வயலூர் முருகன் அருள் பெற்ற வாரியார் தன் முயற்சி ஒன்றையே மூலதனமாக வைத்து தொடங்கிய ராஜகோபுரத் திருப்பணி வாரியாருடன் ஒன்றுபட்ட அன்பர்கள் அனைவரது ஒத்துழைப்புடன் 1937 –ல் நிறைவு பெற்று திருக்குடமுழுக்கு நடைபெற்றது. அன்று முதல் வயலூர் திருக்கோயில் திருப்பணிக்கு வாரியார் சுவாமி நிரந்தர தலைவர் என்பது பிரசித் தமாகிவிட்டது. அதன் பின்னர்.

கோயிலில் ராஜகோபுரத்திற்கு முன்பக்கம், அற்புதமான மண்டபம் அமைக்கப்பெற்று முதல் கோபுரம் ஒன்றும், அலுவலகம் ஒன்றும் அமைக்கப் பெற்றது. தெற்கு உட்பிரகாரத்தில் மண்டபங்கள் உயரத்தூக்கி ஒட்டப்பட்டது. வடக்குப் பிரகாரத்தில் தியான மண்டபம் அமைக்கப் பெற்ற திருப்பணி வாரியார் சுவாமி தலைமையில் நிறைவு செய்யப்பெற்றது.

பக்தர்கள் வந்தால் தங்கியிருந்து வழிபட விருந்தினர் விடுதிகளும் திருப்பணியில் கட்டி முடிக்கப்பெற்றது. 1969 ம் ஆண்டு ஜூன் மாதம் 19 ம் தேதி வியாழக்கிழமை ஸ்ரீவள்ளி நாயகி தேவகுஞ்சரி உடனுறை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமிக்கும், ஆதிநாயகி உடனுறை ஆதிநாதர் பொய்யாக்கணபதி ஆலய அஷ்டபந்தன திருக்குடமுழுக்கு சிறப்புடன் வாரியார் சுவாமி முன்னின்று நடத்தி வைத்தார்கள். வாரியார் சுவாமிகளின் தமையனார் ஸ்ரீமறைஞான சிவம் மேற்பார்வையிட்டு செம்மையாக செய்து முடித்தார்கள்.

மூன்றாவது முறையாக வாரியார் சுவாமிகளின் தலைமையில் இத்திருக் கோயிலில் உள்ள எல்லா விமானங்களும் மற்றும் கோபுரங்களும் பழுதுபார்க்கப்பட்டு பஞ்சவர்ணம் தீட்டப்பட்டு கோயில் மேல் கூரை முழுவதும் தட்டோடு போடப்பட்டு, பல அரிய திருப்பணிகள் முடிக்கப்பட்டு 13–7–83 அன்று திருக்குடமுழுக்கு சிறப்பாக நடைபெற்றது.

அதன் பின்னர், சுபஸ்ரீ யுவ வருஷம் ஆனி மாதம் 32ம் தேதி 16–7–95 ஞாயிற்றுக்கிழமை அ/மி வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணிய சுவாமிக்கும், ஆதிநாதர், பொய்யாக் கணபதி ஆ லய திருக்குடமுழுக்கு நடைபெற்றது.

தினசரி பூசையும், திருவிழாக்களும்

இத்திருக்கோயிலில் திருஅனந்தல், காலசந்தி, உச்சிக்காலம், சாயரட்சை, இரண்டாம் காலம், அர்த்தசாமம் ஆகிய ஆறுகால பூசை நடைபெறுகிறது.

சஷ்டி, கார்த்திகை ஆகிய நாட்களில் சிறப்பு அபிஷேக, அலங்கார ஆராதனை களுடன் சுவாமி திருவீதி உலாக்காட்சிகளும் நடைபெறுகின்றன.

வைகாசி மாதம் விசாக நட்சத்திரத்தில் பாற்குட அபிஷேகம் பிரசித் தமானது. தமிழ்ப்புத்தாண்டு தினத்திலும், தை அமாவாசை, மாசிக் கார்த்திகை, பங்குனி உத்திரம் ஆகிய தினங்களில் மஹாபிஷேகமும் நடைபெறுகிறது.

ஆடி அமாவாசை, ஆடிகிருத்திகை, தைபூசம், பங்குனி உத்திரம், வைகாசி விசாகத்தில் தேரோட்டமும், தெப் போற்சவமும், கொண்ட பிரம்மோற்சவம், ஆனி மாதம் அருணகிரிசுவாமி விழா, ஆவணி விநாயகர் சதுர்த்தி விழா, புரட்டாசியில் நவராத்திரி விழா, ஐப்பசியில் கந்த சஷ்டி விழா, கார்த்திகை தீபம், மார்கழி திருவாதிரை, மாசி மகம் என மாதந்தோறும் விழாக்கள் சிறப்புற நடைபெற்று வருகிறது.

தீராத வினை தீருமிடம் வயலூர், தீவினைகள் நாடாமல் தடுக்க உதவும் இடம் வயலூர். அறியாமல் செய்த பாவம் அகற்றுமிடம் வயலூர். அன்னை தந்தையரை வழிப்பட்டு அமர வாழ்வு, என்று அறிவுறுத்தும் இடம் வயலூர். மங்காத புகழ் மணக்கும் தங்கத் திருப்பதி வயலூர்பதி என்பது அனுபவிப்பவர்கட்கு மட்டுமே விளங்கும்.

பதிவுஎண்: TN/CH(C)/305/09-11/WPP NO. 451/09-11

அருள்மிகு அறம்வளர்த்தநாயகி உடனாய அருள்மிகு குறுங்காலீஸ்வரர் திருக்கோயில்

கோயம்பேடு - சென்னை - 600107

திருப்பணி நன்கொடை வேண்டுகோள்.

மிகப் பழமை வாய்ந்ததும், பிரசித்தி பெற்றதும், மூலவர் அருள்மிகு குருங்காலீஸ்வரர் 2000 ஆண்டுகளுக்கு முன் சுயம்புவாய் தோன்றியதும், இராமபிரானின் புதல்வர்கள் லவ குசலர்கள் வழிபட்டதும், வால்மீகி முனிவர் ஆசிரமம் அமைத்து தவம் இருந்த இடமும், பல்லவ, சோழ, விஜயநகர மன்னர்கள் திருப்பணிகள் செய்து தான தர்மங்கள் வழங்கியதும், அருணகிரிநாதர் பாடல் பெற்றதும், அருள்மிகு சரபேஸ்வரர் வழிபட்டு பெருமையுடையதுமான திருக்கோயில் அருள்மிகு குறுங்காலீஸ்வரர் திருக்கோயில்.

இத்தகைய சிறப்புகள் வாய்ந்த பழமையான இத்திருக்கோயிலின் ஏழு நிலை இராஜகோபுரத் திருப்பணி ரூபாய் எண்பது லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 1-9-2008 அன்று நன்கொடையாளர்களைக் கொண்டு பணி துவக்கப் பட்டுள்ளது. அஸ்திவாரம் வரை தற்போது பணி நிறைவுற்றுள்ளது.

நன்கொடையாளர்கள் இந்த இராஜகோபுரத் திருப்பணிக்கு நன்கொடை வழங்கி அருள்மிகு அறம் வளர்த்த நாயகி உடனாய அருள்மிகு குறுங்காலீஸ்வரர் அருள் பெற வேண்டுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்கொடை அனுப்ப வேண்டிய முகவரி

செயல் அலுவலர்
அருள்மிகு குறுங்காலீஸ்வரர் திருக்கோயில்,
கோயம்பேடு, சென்னை - 600 107.

இப்படிக்கு

ப்பி.வாசுநாதன், எம்.ஏ.பி.எல்.,	த.மோகனசுந்தரம்
தக்கார்-/துணைஆணையர்	செயல் அலுவலர்